# நான்

உளவியல் சஞ்சிகை



# பொறுப்புக்கள்





மலர் 26

இதழ் 06

கார்த்திகை – மார்கழி 2001

# நான்

உளவியல் சஞ்சிகை

மலர்: 26
இதழ்: 06
கார்த்திகை - மார்கழி 2001 விலை 15/=



ஆசிரியர்:
போல் நட்சத்திரம் O.M.I, B.Th, STL

இணையாசிரியர்:
பொன்சியன் O.M.I, B.Th, B.A. (Hons)

ஒருங்கிணைப்பாளர்:
ஜெயந்தன் O.M.I., B.Th., Rome

நிர்வாகக் குழு:
அ.ம.தி.இறையியல் சகோதரர்கள்
ஜோசப் பாலா

ஆலோசகர் குழு:
டேமியன் O.M.I., M.A.
டானியல் O.M.I, M.A.
செல்வரெட்ணம் O.M.I, Ph. D.
N. சண்முகலிங்கன், Ph.D.
Dr. R. சிவஷங்கர் M.B.B.S.
றீனா H.C. Dip. in Counselling, Kent
ஜீவனதாஸ் O.M.I, B.A. (Hons), B.Th., Dip.Ed.
ஜீவா போல் O.M.I, M.Phil.


உள்ளே..........


ஆசிரியா அரும்புகள்
பொறுப்புக்கள் சுமைகளல்ல
முரண்பாட்டுச் சூழலில் எம் சமூக-
- பொறுப்புணர்வு
பொறுப்பற்றவர்கள்
காயம் ஏற்பட்ட ரோஜாவிற்கு
பொறுப்புக்கள் -ஒரு முகாமைத்துவ நோக்கு
பொறுப்புக்கள் உணரப்படும்போது
ஊர்க்கிளி
குடும்பம், உறுப்பினர்களின் பொறுப்புணர்வில்
-நிலைக்கிறது
தொடர்பூடகங்களில் பெண்கள்
யார் பொறுப்பு
பொறுப்பில் ஆதவர்கள்
கருத்துக்குவியல் - 88
மூத்தோர் மட்டில் இளையோரின் பொறுப்பு
பார்வை
வாலிப வசந்தம்
நாடோடி



## தொடர்புகளுக்கு

"நான்",
டி மசனட் குருமடம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

'NAAN'
Tamil Psychological Magazine
De Mazenod Scholasticate,
Columbuthurai,
Jaffna, Sri Lanka.

Tel. & Fax. 021 - 2721

**ஆசிரியர் அரும்புகள்!**

உளவியல் நோக்கில் "பொறுப்பு" ஒரு மனிதனை நிறைவான வாழ்விற்கு இட்டுச் செல்கின்றது. சமூகநோக்கில் அது அவனை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள செய்கின்றது. ஆன்மீக நோக்கில் அது அவனை நேரிய வாழ்வில் உறுதிப்படுத்துகின்றது. பொறுப்புள்ளவர்களிடம் உண்மைத் திறன், நேர்மையுணர்வு, தலைமைத்துவ பண்பு, சுய மறுப்புநிலை, பிறர்நலம் பேணல் போன்ற உயர்நலப் பண்புகள் இயல்பாகவே காணப்படும். தனிமனிதன் தனக்குள்ளே பொறுப்பற்ற தன்மைகளால் அழுத்தப்படும் பொழுது அவனது புறச் செயற்பாடுகளும் பொறுப்பற்ற விளைவுகளை உண்டாக்குகின்றன. பொறுப்பற்ற சொற்பிரயோகங்கள், செயற்பாடுகள் தனிமனித ஆளுமை சிதைவையும் சமூக சீரழிவுகளையும் ஏற்படுத்துகின்றன. ஆக பொறுப் பற்றவன் தனக்கோ அல்லது சமூகத்திற்கோ அல்லது தன்னில் சார்ந்திருப்போருக்கோ பயன்பாடற்றவனாக இருப்பதோடு அவர்களுக்கு சுமையாகவும் மாறுகின்றான். அத்தகை யோரிடம் நம்பிக்கையுடன் எந்தப் பொறுப்பையும் எவரும் ஒப்படைக்க மாட்டார்கள்.

நம் நெஞ்சங்களை உருக்கும் மண்ணின் சமகால பிறழ்வு நிகழ்வுகள் நம் மத்தியில் பொறுப்புள்ள மனிதர்கள் அருகிக் கொண்டு செல்வதையே இனம் காட்டுகின்றன. பொறுப்பற்ற பெற்றோர்-பிள்ளைகள், ஆசிரியர்-மாணவர்கள், கணவர்-மனைவியர், முகாமையாளர்கள்-கீழ் ஊழியர்கள், எசமான்கள்-சேவகர்கள் போன்ற பல்வேறு உறவு நிலைகளில் பொறுப்புக்கள் பேணப்படாத தன்மையால் ஒழுக்கச் சீர்கேடுகள் மலிந்து சமூகக் கட்டமைப்புக்கள் சிதைந்து வாழ்வை மிகவும் கீழ்மட்டத்திற்கு கொண்டுவரும் பரிதாப, ஆனால், பயங்கரமான வாழ்வு முறைகளைப் பார்க்கின்றோம். வயது, அந்தஸ்து, ஆண்-பெண் என்ற வேறுபாடுகளின்றி சகல மட்டத்தினரும் தங்கள் பொறுப்புக்களை உதாசீனம் செய்து வருவது நம் மண்ணின் துயரங்களில் வெளிப்படுகின்றது. எப்பொழுது தனி மனிதன் ஒருவன் பொறுப்பற்றவனாக இருக்கின்றானோ அப்பொழுது அவனது ஆக்கும் சக்தியும் மரணித்து அவன் வாழும் சமூகத்தையும் மரணிக்கச் செய்கின்றது.

"பொறுப்பு" என்னும் சிந்தனையில், ஆக்கம் பெற்றிருக்கும் பல கருத்தோவியங்கள் இம்மலரில் விரிகின்றன. அவை பல்வேறு துறைகளைச் சுட்டிக்காட்டி எல்லோரையும் பொறுப்புள்ள மனிதர்களாக உருவாக்கம் பெறவும், வாழவும் தூண்டுகின்றன. இச்சிந்தனைகள் நம் வாழ்வின் குறிகாட்டிகளாகி அதைச்செப்பனிடட்டும்.

தோழமையுள்ள வாழ்த்துக்களுடன் **மா. போல் நட்சத்திரம் அமதி**

# பொறுப்புக்கள் சுமைகளல்ல

**திருமதி. நொ. யூ. தர்மரட்ணம்**
யா / புனித சாள்ஸ் ம. வி.
யாழ்ப்பாணம்.

நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பதுபோல ஒவ்வொரு மனிதனுக்கும் பொறுப்புக்களும், கடமைகளும் இருக்கத்தான் செய்கின்றன. எந்தநிலையில் இருக்கும் மனிதனுக்கும் பொறுப்புக்கள் உண்டு. தாயாக, தந்தையாக, பிள்ளையாக, மாணவனாக, ஆசிரியனாக, அதிபராக, மதத் தலைவராக, சமுதாயத் தலைவனாக, ஏன் நாட்டுத் தலைவராகக் கூட இருக்கலாம். அத்தனை பேருக்கும் ஏதோ ஒருவகையில் பொறுப்புக்கள் இருப்பதனால், அப்பொறுப்புக்களை எவரும் தட்டிக்கழிக்கமுடியாது.

மனித சமுதாயத்தில் இன்று எங்கு பார்த்தாலும் நொந்த நிலை. அழுது கொண்டிருப்போரும், அழத் தயாராயிருப்போரும், *இனி இருந்து என்ன பயன்?* என்று விரக்தியின் விளிம்பில் நிற்போரும், கையாலாகாத் தனத்தால் வெந்து வேதனையில் துடிப்போரும் மலிந்து கிடக்கக் காரணம் என்ன? இது என் பொறுப்பல்ல என்று நழுவி விடுவதும், தனக்குரிய பொறுப்புக்களை உணராதிருப்பதுவுமேயாகும். எனக்குரிய பணி என்ன? பொறுப்பு என்ன? என்பதனை ஒவ்வொருவரும் உணர்ந்து தன் கடமையில் இருந்து தவறாது பொறுப்புள்ளவனாக மாறும்போது அவனது ஆன்மா திருப்தி, சாந்தம் அடைவதோடு, மற்றவர்களையும் மகிழ்ச்சியாக வாழவைக்கமுடியும். பொறுப்புக்களை ஒருபோதும் சுமைகளாகக் கருதக்கூடாது.

குடியினால் குடும்பத்தின் நிம்மதியை இழக்கச் செய்யும் தந்தையர், பிள்ளைகளைக் கடமைக்காக வளர்க்கும் தாய்மார், ஏன் எனக்கு மட்டும்தானா பொறுப்பு? என்று தான்தோன்றித் தனமாக நடக்கும் பிள்ளைகள். இவ்வாறு ஒவ்வொரு நிலையினரதும் பொறுப்புக்கள் தட்டிக்கழிக்கப்படுகின்றன. பெற்றோரை தாம் பராமரிக்கவேண்டும் என்பதை உணராமை, *இது என் பொறுப்பல்ல அண்ணனின், தம்பியின் பொறுப்பு,* என்றும், பெண்பிள்ளைகளுக்கல்ல ஆண்பிள்ளைகளுக்கான பொறுப்பு என்றும் தட்டிக்கழித்தல் போன்ற சிந்தனையற்ற செயல்களால் முதியோர் இல்லங்கள் மலிந்து விட்டன. முதியோர் பிணங்கள் வீடுகளிலும், தெருக்களிலும், வைத்தியசாலைகளிலும் அநாதரவாகக் கிடக்கின்றன. இதுதான் இன்றைய நிதர்சனம்.

தந்தை தன்பொறுப்புக்களையும், கடமைகளையும் உணர்ந்து செயற்பட்டிருந்தால் படிக்கவேண்டிய வயதில், தன்கல்வி, விளையாட்டு,

மகிழ்ச்சி எல்லாவற்றையும் துறந்து கூலிவேலைசெய்து குடும்பப் பாரத்தை சுமக்கும் நிலை பிள்ளைகளுக்கு ஏற்பட்டிருக்காது. தாயானவள் தன் பிள்ளையின் எதிர்காலம் சிறப்படைய வேண்டும் என்ற உணர்வுடன் பிள்ளைக்கு உணவூட்டும் போதே கல்வியையும் ஒழுக்கத்தையும் சேர்த்து ஊட்டி வளர்த்திருந்தால், கட்டுக்கடங்காமல் ஊதாரியாக பிள்ளையின் வாழ்வு சீரழிந்திருக்காது. ஒரு பிள்ளையின் ஆரம்பக்கல்வி அன்னையின் மடியில்தான் தோன்ற முடியும்.

"உன்னிடம் ஒப்படைத்த குழந்தைகளை நீ என்ன செய்தாய்"? என்ற மரிய மொன்ரிசோரி அம்மையாரின் வினா ஒவ்வொரு ஆசிரியர் மனதிலும் எழவேண்டும். ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொரு மாணவனும், மாணவியும் நாளைய சமுதாயத்தின் விடியலைத் தீர்மானிக்கின்ற கருவி. ஆதலால் மாணவர் ஒவ்வொருவரையும் இனங்கண்டு அவரின் திறமைகளை வெளிக்கொணர்ந்து, ஆற்றல்களை வளர்த்தெடுக்கும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களுடையது. *"ஏ மக்கு! நீ உருப்படமாட்டாய்"* என்றோ *"நீ மாடு மேய்க்கத்தான் லாயக்கு"* என்றோ கோபப்பட்டு வார்த்தைகளைப் பிரயோகித்து மாணவர்கள் மீது முத்திரை குத்துவதன் மூலம் அவர்களின் எதிர்கால வாழ்விற்கு கேடுவிளைய வாய்ப்பேற்படுகிறது. மாணவர்களுக்கு வெகுமதிகள், பாராட்டுக்கள், கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்துவதுடன், மெல்லக் கற்கும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கேற்ற கற்பித்தல் முறையைக் கையாள்வதன் மூலமும், ஒவ்வொரு மாணவரிடமும் காணப்படும் உடல், உள குறைபாடுகளை அறிந்து நிவர்த்தி செய்வதன் மூலமும் பொறுப்பு மிக்க ஆசான்களாக மாறமுடியும்.

மண்ணில் புதைக்கப்பட்ட விதைக்கு பசளையும், நீரும் இட்டால்தானே செழிப்பான தாவரமாக வளரமுடியும். அவ்வாறுதான் சிறந்த மாணவ சமுதாயத்தையும் உருவாக்குவதில் எல்லா ஆசிரியர்களுக்கும், அதிபர்களுக்கும், கல்விப்புலம் சார்ந்தவர்களுக்கும் பல பொறுப்புக்கள் உண்டு என்பதை அனைவரும் உணர்ந்து சீரிய முறையில் பொறுப்புக்களை ஏற்று செயலாற்றுவார்களேயாயின் சிறந்த ஆரோக்கியமான கல்வி, ஒழுக்கம், நல்ல மனப்பாங்குகளில் வளர்ச்சிபெற்ற சமுதாயத்தை உருவாக்கமுடியும். இன்று யாழ். மாவட்டத்தில் கல்வியில் வீழ்ச்சி, ஒழுக்க சீரழிவு, சுயநலம் கருதும் குறுகிய மனப்பாங்கு கொண்ட மாணவ சமுதாயத்தையே காண்கிறோம். இவற்றுக்கு பலம்சேர்ப்பது போல அண்மைக்காலங்களில் எமது மண்ணில் நடைபெற்ற, நடைபெற்று வருகின்ற சம்பவங்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய கல்விச்சீர் திருத்தத்தின் தேசிய இலக்குகளில்

- தேசிய ஐக்கியம், ஒருமைப்பாடு, ஒருங்கிணைப்பு முதலியவற்றை அடைதல்.

- சமூக நீதியை நிலைநாட்டுதல்.
- மாற்றமடையும் புதிய உலகச் சூழலில் நீடித்து வாழ்வதற்குரிய ஆற்றல்களை வளர்த்தல்.
- ஒருவர் நலனில் மற்றவர் தொடர்ச்சியாக பங்கெடுக்கும் ஆற்றலை வளர்த்தல்.

ஆகியவையும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இத்தகைய குறிக்கோள்களை அடைவதற்குத் தேவையான ஐந்து அடிப்படைத் தகைமைகளில் ஒழுக்கம், சமயம் என்பன தொடர்பான தகைமை முக்கியமானது. அத்தகைமையை வளர்க்கும் பொறுப்பு ஒவ்வொரு ஆசிரியருடையது என்ற கருத்துக்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது. பாடசாலைகள்தான் கல்வியுடன் ஒழுக்கத்தையும் கற்பிக்கும் களமாக அமைகின்றன. ஆதலால் கல்விப் புலம் சார்ந்த அனைத்து நிலையினரும் மாணவர்கள் இவ்வுயர்ந்த இலக்குகளை அடையும் வகையில் செயற்படுவது இன்றியமையாதது. மாணவர்களுக்கும் பாடசாலை மட்டில் பல பொறுப்புக்கள் உண்டு. தமக்குரிய அல்லது தமக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களை சிறப்பான முறையில் செய்து முடிக்கும் பொழுது அதிபர், ஆசிரியர் இதர மாணவர்களின் பாராட்டைப்பெற முடிவதுடன், எதிர்காலத்தில் சுயமாகச் செயற்படுவதற்கேற்ற தன்னம்பிக்கையைப் பெறுவதற்கும் வாய்ப்பேற்படுகிறது.

பெற்றோர், ஆசிரியர், மதத்தலைவர்கள், கல்வியுடன் தொடர்புடையோர் அனைவருக்கும் மற்றவர்களைவிட பொறுப்புக்கள் அதிகம் உண்டு. காரணம் இவர்கள் மனித நாகரிகத்துடன் நெருங்கிய தொடர்புடையவர்கள், மனிதனை மாண்புடன் வளர்க்கவேண்டியவர்கள். ஓர் உயர்ந்த உயிர்ச்சூழலை உருவாக்கும் பொறுப்பு இவர்களுடையது. மக்களை ஆன்மீகத்தில் நெறிப்படுத்தவேண்டிய கடமை இவர்களுடையது. நாட்டின் தலைவர்கள் கூடுதல் பொறுப்புணர்ச்சி மிக்கவர்களாக வாழவேண்டும். பொறுப்பற்ற வகையில் எமது நாட்டுத் தலைவர்கள் நடந்து கொண்டமையால்தான் தமிழர்களாகிய எமக்கு இன்று இந்த நிலை *“பெரும்பான்மை மக்களின் விருப்பங்கள் நிறைவேற்றப்படும்போது சிறுபான்மை மக்களின் உரிமைகளும் மதிக்கப்படவேண்டும்”* என்பது தானே ஜனநாயக விதி. சிறுபான்மை மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டமைக்கு, மறுக்கப்பட்டு வருகின்றமைக்குக் காரணம் தலைவர்களின் பொறுப்பற்ற அரசியற்செயற்பாடுகள்தான்.

எனவே தமக்குரிய பொறுப்புக்களை ஒவ்வொருவரும் முதலில் உணரவேண்டும். அடுத்து அதனைச் செயற்படுத்த முனைய வேண்டும். *“என்கடன் பணிசெய்து கிடப்பதே”* என்ற தாரக மந்திரத்தை அனைத்து நிலையினரும் சிந்தையில் இருத்தி பொறுப்புணர்ச்சியுடன் செயற்படும்போது வீட்டில், சமூகத்தில், நாட்டில் அமைதி, சமாதானம், நிம்மதி ஏற்பட இடமுண்டு.

# முரண்பாட்டுச் சூழலில் எம் சமூக பொறுப்புணர்வு
## (Social Responsibility in a Conflict Situation)

அ. எ. றிச்சேட்
விரிவுரையாளர், அரசறிவியல் சமூகவியல் துறை
யாழ் பல்கலைக்கழகம்.

**முன்னுரை**

மனித வாழ்வில் தொடர்ச்சியாகப் போராட்டங்களும், சிக்கல்களும், முரண்பாடுகளும் வந்து கொண்டே இருக்கின்றன. சமூக படி மலர்ச்சியில் (Social Evolution) கூட்டம் கூட்டமாக வாழ்ந்த மனித இனம் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட ஒன்றுடன் ஒன்று போராடத் தொடங்கின. பலம் வாய்ந்த கூட்டம் மற்றையதை அழித்தது. இந்நிலை காலப்போக்கில் பல புதிய சிந்தனைகளை உருவாக்கியது. இன்றைய உலகும் இதற்கு மாறானது அல்ல. எம் நாட்டில் இடம் பெறும் இனத்துவ முரண்பாடு (Ethnic Conflict) கூட ஒரு வகையில் முரண்பாட்டுச் சூழமைவினை படம் பிடித்துக் காட்டும். இந்த வகையில் இம் முரண்பாட்டுச் சூழலை இலகுவாய் புரிதலுக்கான கோட்பாட்டு அடிப்படைகளையும், அவை தொடர்பான எம் சமூக பொறுப்புக்களையும் (Social Responsibilities) தெளிவுபடுத்துவதாய் இக்கட்டுரை அமையும்.

**முரண்பாடு என்ற எண்ணக்கரு**

முரண்பாடு என்ற எண்ணக்கருவை ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு வகையில் உணர்ந்திருப்பான். தனிமனிதன் தனக்குள்ளும் அல்லது இன்னொரு தனிமனிதனுடனும், தனிமனிதன் ஒரு குழுமத்துடனும், ஒரு குழுமம் இன்னொரு குழுமத்துடனும் முரன்பாடுகளைக் கொண்டிருத்தல் கூடும்.


இரண்டாம் உலகப் போருக்கு பிற்பட்ட காலப்பகுதியிலேயே சமூகவியல் துறையானது முரண்பாடு என்ற எண்ணக்கருவை உள்வாங்கி அதற்கென பல கோட்பாடுகளை உருவாக்கியது எனலாம். இம்முரண்பாட்டுக் கோட்பாட்டின் மூலகர்த்தாக்களாக கார்ள் மாக்ஸ் (Karl Marx), டறன் டோவ் (Daren Dorf) ஆகியோர் காணப்படுகின்றனர். இவர்கள் முரண் பாட்டினை இயங்கியலின் (Dialectics) ஊடாக விளக்கினர்.

சமூகவியல் கோட்பாட்டு மரபில் இணக்கம் (Consensus) காத்திரமானது. சமூகக் கட்டமைப்புக்குள் நிகழும் சமூக ஒழுங்கமைவின்மைகளையும் - உரிமை மீறல்களுக்கெதிராய் குரல் கொடுக்கும் கருத்தியல்களை உள்ளடக்கும். மாக்ஸின் முரண்பாட்டுக் கோட்பாடு, சமூக மாற்றத்திற்கு முரண்பாடு அவசியம் எனும் அணுகுமுறைகளை உள்ளடக்கும்.

இணக்கக் கோட்பாடு மனித உரிமைகளைப் முரண்பாட்டுச் சூழலில் பேணுவதில் குறிப்பாய் சமூகக் கட்டமைப்புக்குள் அதன் முன் தேவைப்பாடுகளை (Prerequisites) பேணுவதில் ஆர்வம் காட்டும் (Janathan H.Turner, 1974) முரண்பாட்டுச் சூழமைவினை இலகுவாய் விளங்குதலுக்குரிய பிரதான அடிப்படைகளை முரண்பாடும், இணக்கமும் (Conflict and Consensus) ஆகிய பிரதான கருத்தியல்கள் தெளிவுபடுத்தும்.

**முரண்பாட்டுச் சூழல் தொடர்பான மாக்ஸிச பகுப்பாய்வு:**

மார்க்ஸிச முரண்பாட்டுக் கோட்பாட்டின் படி சமூக புரட்சிகர வகுப்பு முரண்பாடு சமூக மாற்றம் என்ற பார்வையிலே அவர் நோக்குகின்றார். இங்கு முரண்பாடு காரணமாக சமூக அமைப்பானது இரு வேறுபட்ட ஆர்வங்களையுடைய முதலாளி தொழிலாளி வகுப்புக்களாக பிளவுபடுகின்றது. சுரண்டப்படும் தொழிலாளர் வகுப்பு முதலாளி வகுப்பைத் தூக்கியெறிவதுடன் அவர்களுக்கெதிராக பல கிளர்ச்சிகளிலும் ஈடுபட்டுக்கொள்வர். இதனூடாக விரைவானதோர் சமூகமாற்றம் வேண்டப்படும். இதன்வழி எம் நாட்டில் காணப்படும் முரண்பாட்டுச் சூழலின் போக்கினை பின்வரும் காட்டுரு வழியே விளங்கிக் கொள்ள முடியும்.




(சுய உருவாக்கம்) - (Creative Thinking)

இலங்கையின் நிலவும் இனத்துவ வகுப்பு முரண்பாடு பெரும்பான்மை (Majority), சிறுபான்மை (Minority) என இரு வேறுபட்ட ஆர்வங்களையுடைய வகுப்புக்களாக துருவப்படுத்தி (Polarization) யுள்ளது. வகுப்புணர்வானது (Class Consciousness) ஒரு சுற்றோட்ட வடிவிலே இரு இனங்களுக்குமிடையேயான இடைவெளியை பேணும். இதன் வழி இரு இனத்துவக் குழுக்களும் முரண்படத்தக்கதான ஒரு சூழல் ஏற்பட வாய்ப்பாகின்றது. (Brinkerholf , 1996)

இத்தகைய முரண்பாட்டு சூழலிலே பெரும்பான்மை இனத்துவக் குழு, சிறுபான்மை இனத்துவக் குழுவின் உரிமைகளை திட்டமிட்டு துண்டாடுகின்றது. 1970 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டது. தமிழர்களுக்கான வேலை வாய்ப்புகள், புலமைப்பரிசில்கள், அடிப்படைத் தேவைகள் என்பனவற்றில் பாரபட்சம் காட்டப்பட்டு புறம் தள்ளப்பட்டுள்ளனர். இதன் வகுப்புணர்வின் உச்சநிலையாக இனத்துவம் எனும் முரண்பாட்டுக் சூழல் தொடர்ந்து உள்ளது.

முரண்பாட்டுச் சூழலின் அடிப்படைகள்

முரண்பாட்டு சூழலை பின்வரும் மூன்று அடிப்படைகளில் விளங்கிக் கொள்ள முடியும்.

2. முழுமையான சுரண்டல் (Naked exploitation)
3. இனத்துவ முரண்நிலைமைகள் அழுத்தமும் பதட்டமும்(Ethnic Contradictions, Strains and Tensions)
4. வன்முறை ரீதியான மாற்றம் (Violent change - Revolution)

ஓர் இனம், இன்னோர் இனத்தினை முழுமையாக சுரண்டும் போக்கினை நாம் எமது நாட்டு அனுபவத்தினைக் கொண்டு விளங்கிக் கொள்ளலாம் . உதாரணமாக

- அண்மையில் பாராளுமன்றத்தில் ஜனாதிபதியினால் கொண்டுவரப்பட்ட அரசமைப்பு சீர்திருத்த சட்ட நகல் மீதான வாசிப்பின் போது பௌத்த துறவிகள் நடந்து கொண்ட விதம்
- தமிழ்ப்பிரதேசங்களில் அத்துமீறிய குடியேற்றங்கள்.
- இனப்பாரபட்சம் (Ethnic discrimination )
- பௌத்த மதத்திற்கு கொடுக்கப்படும் மேலான்மை
- இனத்துவம் சார் முற்சாய்வுகள் (Racial Prejudices)
- சிங்கள மொழிக்கான உயர் அங்கீகாரம்
- ஏனைய இனத்துவ பாகுபாடுகள். (Ethnic Segreation)

மொத்தத்தில் அரசியல், பொருளாதார, பண்பாட்டு ரீதியாக இச்சுரண்டல் காணப்படுகின்றது (இனத்துவமும், சமூக மாற்றமும் சமூக விஞ்ஞானிகள் சங்க வெளியீடு)

❑ இனத்துவ முரண்பாட்டு நிலைமையும், அழுத்தமும் பதட்டமும் (Ethnic cotradictions, strains and tensions )

எமது நாட்டில் இடம் பெறும் போர், மன அழுத்தத்தையும் பதட்டத்தையும் இன்னும் உளரீதியாக பல தாக்கங்களையும் உண்டு பண்ணும். சிறுபான்மையினர் தேவைக்கேற்றபடி மனித கேடயங்களாய் பயன்படுத்தப்படல், அவசரகால பயங்கரவாதத் தடைச்சட்டங்கள் ஊடாக இளைஞர், யுவதிகள் கண்டபடி கைது செய்யப்படல், காணாமல் போதல் கற்பழிப்பு, தடுப்பு முகாம்களில் அனுபவிக்கும் கொடுரங்கள் போன்றன இதன் வடிவங்களாகும். (கள ஆய்வுகள் 1999)

❑ வன்முறை ரீதியான மாற்றம் (Voilent change - Revolution)

*"குட்டக் குட்ட குனிபவனும் மடையன் குனியக் குனியக் குட்டுபவனும் மடையன்"* என்பதற்கு அமைய "இணங்குதல்" என்பதற்கு அர்த்தமற்றுப் போய் முரண்பாடு அதிலும் புரட்சியின் வழியான மாற்றமே இறுதித் தீர்வுக்கு வழி எனும் போக்கில் எம் நாட்டு சமூக அரசியல் நிலமை மாறியமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதன் வழியாக சமூக, பண்பாட்டு விளைவுகளின் தாக்கங்களும் இன்று எம் புலங்களில் அதிகரித்துள்ளது. உதாரணமாக.
மனிதத்துவத்தை பேண முடியாதளவுக்கு மனித உரிமைகள் மறுக்கப்படுகின்றன. மேலும் ஒரு இனத்துக்குள்ளேயே வக்கிர எதிர்ப்புணர்வு நடத்தைகளும் நிறையவே காணப்படுகின்றன.

முரண்பாட்டுச் சூழலில் எங்கள் சமூகப் பொறுப்புணர்வு யாது?

- மனித உரிமைகள் மட்டில் எம் புலங்களில் காணப்படும் உள்ளூர் மனித உரிமை அமைப்புக்கள் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பணி எந்தளவு பொறுப்புணர்வுடன் மேற்கொள்ளப்படுகின்றது?
- தனியன் எனும் முறையில் சமூகத்தை தார்மீக வழியில் கொண்டு செல்ல வேண்டிய பாரிய சமூக பொறுப்புணர்வென்பது ஒவ்வொருவருக்குமுண்டு.
- மக்களை ஒன்று திரட்டலின் வழி (Social Mobilization) மனித உரிமைகள் காக்கும் போரில் மக்கள் மத்தியில் சமூக விழிப்புணர்வு உண்டாக்கப்படல் வேண்டும். இதற்கு மக்களின் நேரடியான பங்களிப்பின் வழி, சமூக ஒழுங்கமைப்பின் ஊடாக மக்களை மனித உரிமைகள் மட்டில் அக்கறையுடையவர்களாக்குதல்.
- இணக்கமா? முரண்பாடா (Consensus V/s Conflict) என்ற சமூக இரண்டக நிலையில் முரண்படும் சமூக உலகை நல்வழி காட்டி

சரியான பாதையில் வழிகாட்ட சமூக ஒருங்கிணைவு அவசியமானதாகும்.

- தட்டிக்கேட்டல், குரல் கொடுத்தல், வாதிடல் சிறுபான்மையினருக்கு ஒத்துழைப்பு வழங்கல், சமூக சீர் குலைவைத் தடுத்தல், சமூக விழிப்புணர்வை உண்டாக்கல் போன்றவை மூலம் பாதிக்கப்பட்ட இனத்திற்கு மறுக்கப்பட்ட சமூக உரிமைகளை பெற்றுக் கொடுக்க வாய்ப்புகள் உண்டு.
- பேச்சு வார்த்தை மூலம் மூன்றாம் தரப்பு மத்தியஸ்துடன் பேச்சுக்களை ஆரம்பித்து நிலையான தீர்வினை நிலை நிறுத்த உலக நாடுகளை உதவும்படி பணித்தல்
- சமூகத்தின் முதுகெலும்பாய்த் திகழும் இன்றைய இளையோரை கருத்தரங்குகள், ஆய்வுகளின் வழிசமூக அறிவை ஊட்டி சமூகத்திற்கு ஏற்புடையவர்களாக்குதல் இவை யாவும் எம் சமூக பொறுப்புக்களாகும்.

உசாத்துணைகள்:-


- Sieghart Paul, The International Law of Human Rights, Oxford University Press, 1983,
- Cuff.E.C and Payne G.C.F Perspectives in Sociology, Geroge All En & Un Win 1984.


தலைமைத்துவம் என்பது இன, மொழி, மத, பால் ரீதியாக வேறுபடுத்திப் பார்க்கக் கூடியதொன்றல்ல. ஆனாலும் இன்று மூன்றாம் மண்டல நாடுகளிலே சமஉரிமை கோரி போராடும் அநேகமான பெண்கள் தலைமைப் பீடத்தில் அமர்வதற்கு பின்நிற்கின்றனர். தயக்கம் காட்டுகின்றனர் என்பது என்னவோ உண்மையே. அனைத்து பொறுப்புக்களிலிருந்தும் விடுவித்து தலைவியாக இரு என கணவன் அனுமதித்தால்கூட திடநம்பிக்கையின்மை, பயம், மூடநம்பிக்கை (ஆண்களையே தலைவர்களாக்கணும்) காரணமாக ஒதுங்கி விடுகின்றனர். இந்நிலை மாற்றப்படல் வேண்டும். அண்மையில் கலைக்கப்பட்ட பாராளுமன்ற அங்கத்தவர்கள் 225பேரில் 8 பேர் மட்டுமே பெண்கள். ஆனாலும் சின்னதோர் ஆறுதல் உலகின் 1வது ஜனாதிபதி (பெண்), பிரதமர் (பெண்) இருவரும் நம்நாட்டு பெண்களே.

ஜெ. தரன், நெல்லியடி.

# பொறுப்பற்றவர்கள்

"விடியக்காலம எழும்பி பள்ளிக்கு போறதுக்கு நான்தான் உனக்கு முழுவேலையும் செய்து தரணும். பொறுப்பில்லாம வளர்ந்திருக்கிறா" என்று ஒரு தாய் பதினாறு வயது மகளைப் பார்த்து பொரிந்து கொண்டிருக்கிறாள். "நேற்று பள்ளிக்கூடத்துக்கு கொண்டுபோன பேனாவை எங்கையோ தொலைச்சுப்போட்டு இண்டைக்கு புதுப்பேனைக்கு காசு கேக்கிறா" உனக்கு பொறுப்புணர்ச்சியே இல்லை" என்று 15 வயது நிரம்பிய மகனை ஏசிக்கொண்டிருக்கிறாள் இன்னொரு தாய். "டேய்! மாடு மாதிரி வளர்ந்திருக்கிறா உனக்கு பொறுப்பு இருக்குதா? பாண் வாங்கிறதுக்கு காசு தந்தால், காசை தொலைச்சுப்போட்டு வந்து நிக்கிறாய்" என்று ஒரு தந்தை தனது மகனை நையப்புடைத்துக் கொண்டிருக்கிறார்.

இவ்வாறு பொறுப்புக்கள், பொறுப்புணர்ச்சிகள் பற்றி எழுகின்ற பிரச்சினைகள் வீட்டுக்கு வீடு வாசல் படியாயிற்று. ஆரம்பத்தில் பொறுப்புக்கள் பற்றி குடும்பங்களில் எழுகின்ற பிரச்சினைகள் எமது சமுதாயத்தின் வெவ்வேறு மட்டங்களில் இளையோடி எழுவதோடு மட்டுமல்லாமல் சில பாதகமான தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றன. குடும்பப் பொறுப்பிலிருந்து தவறுகின்ற தாய் தந்தையரும், அலுவலக முக்கிய பணிகளிலிருந்து தவறுகின்ற அதிகாரிகளும் அலுவலர்களும் சமூகத்துக்கு சேதத்தையே விளைவிக்கின்றனர். பல்வேறு சமூக மட்டத்திலிருந்து கிளம்பும் இவர்களை பட்டியல் போட்டுக் காட்டுவது எமது நோக்கமல்ல. மாறாக பொறுப்பற்றவர்கள் சமூகத்தில் எப்படி உருவாகிறார்கள் என்பதுதான் எமது இலக்கு.

### எப்படி பொறுப்பற்றவர்கள் உருவாகிறார்கள்?

1. குடும்பம்.

பொறுப்பற்ற தலைமுறையை உருவாக்குவதில் முக்கியபங்கு வகிப்பது குடும்பம். பெற்றோர்களின் மிதமிஞ்சிய பாசம் (செல்லம் கொடுத்து வளர்த்தல்), கண்டிப்பின்மை, தங்கள் தவறுகளை நியாயப்படுத்த முற்படல், பிள்ளைகளுக்கு அந்தந்த வயதில் சொல்லப்படவேண்டியதை சொல்லாது விடுதல் ஆகிய தவறுகள் ஒரு குழந்தை பொறுப்புணர்ச்சியோடு வளருவதை தடுக்கும் தடைக்கற்களாகும். உதாரணமாக ஒரு தாய் படிக்கின்ற தன் பிள்ளைக்கு விடிகாலையில் துயிலெழுப்பி, படுத்தபாயில் தேனீர் கொடுத்து, பல்லுவிளக்கி, முகம்

கழுவி, சட்டைபோட்டு புத்தகங்கள் அடுக்கிக் கொடுத்து தன் பிள்ளையை ஒரு வேலையையும் செய்யவிடாது பாடசாலை செல்லும்வரை அவளே செய்கின்றாள். இதற்குப்பேர் அன்பில்லை. மாறாக பொறுப்பற்ற பிள்ளையை சமூகத்திற்கு கொடுக்க தயார்ப்படுத்துகின்றாள் என்றே அர்த்தம். இப்படி வளர்கின்ற பிள்ளைகள் எதிர்காலத்தில் தங்கள் பொறுப்புக்களை உணராதவர்களாக, பிறரிலே தங்கி வாழ்பவர்களாக, குடும்பத்தில் சமூகத்தில் பொறுப்பற்ற செயல்களைச் செய்து முழு சமூகத்திற்கே உதவாதவர்களாக மாறுவதைக் காணலாம். எனவே ஒவ்வொரு தாயும் தந்தையும் தங்கள் பிள்ளையை தகுந்த சமூகவியலாக்கலூடாக (Socialization) பொறுப்பானவர்களாக மாற்றி சமூகத்துக்கு கொடுக்கவேண்டிய கட்டாய கடமை இருக்கின்றது.

2. பாடசாலை.

வீட்டுக்குழந்தைகள் மாணவர்களாக மாறி தங்கள் இரண்டாம் கட்ட வளர்ச்சிக்கு களமமைக்கப்படும் இடம் பாடசாலையாகும். பாடசாலையில் சிறுவர்கள் மற்ற சிறுவர்களோடு கலப்பது மட்டுமல்லாமல், ஆசிரிர்கள் என்கின்ற இன்னுமொரு பிரிவினரையும் எதிர்கொள்கின்றனர். இங்கு சில பொறுப்பற்ற ஆசிரியர்களை மாதிரிகையாக வைத்துக்கொண்டு தங்கள் நிலைகளை மறந்து பொறுப்பற்றவர்களாகி விடுகின்றனர். குடித்துவிட்டு பாடசாலை சமூகமளிக்கின்ற ஆசிரியரும், மாணவர்முன் புகைக்கின்ற ஆசிரியரும், சினிமாத்தாரகைகள் பாணியில் அலங்கார தேவதைகளாக உலாவரும் ஆசிரியைகளும் பொறுப்பற்ற மாணவர் சமூகத்தை உலகுக்கு கொடுக்கும் கிருமிகள்.

அதுமட்டுமல்லாமல் தற்போதைய பாடத்திட்டத்தின்படி மாணவர்களுக்கு அதிக வேலைகள் கொடுக்கப்படுவதால் பிள்ளைகள் வேலைப்ப ழுவிலிருந்து தங்கள் பெற்றோரைப் பயன்படுத்தியோ, வீட்டு வேலைகள் (Home work) செய்யப்படாதவிடத்து சாக்குப்போக்குச் சொல்லும் யுக்திகளை கையாண்டோ தங்களை பொறுப்பற்றவர்களாக வாழ பழக்கிக் கொள்கிறார்கள். எனவே ஆசிரியர் மாணவர்களை அவதானிப்பதிலும் அவர்களுக்கு சரியான வழியில், அவர்களது பின்புலத்தோடு பொறுப்புக்களை உணர்த்தி தரமான மாணவ சமூகத்தை கொடுக்கவேண்டிய கட்டாய தேவையுள்ளது.

3. தனித்தியங்கல் (Individualism)

தற்கால உலக நடைமுறைகள் இயந்திரமயமாக்கல், உலக மயமாக்கல் ஆகியன இந்த தனித்தியங்களுக்கு அணி சேர்க்கும் முக்கிய காரணிகளாகும். ஒவ்வொருவரும் தனக்குத் தனக்கு என்று சுயநலத்தோடு வாழ முனைந்து மற்றவரை மறந்து வாழத்

தலைப்படுகின்றனர். சில மேலைத்தேய வழக்குகள் எம்முள் கலப்பதால் ஒவ்வொரு பிள்ளையும் பொதுப் பொருட்கள் மீது அக்கறை காட்டாமல் தங்கள் பொருட்கள்மீது உன்னிப்பாக இருப்பதால் பொதுப்பொருட்கள் பற்றிய விடயங்களில் பொறுப்பற்றவர்களாகவே இருக்கிறார்கள். சில குடும்ப வளர்ப்பு முறைகளில் பிள்ளைகள் தங்களைப் பற்றியே சிந்திக்க அதிகநேரம் கொடுக்கப்படுவதால் சமூக உறவுப் பரிமாற்றத்தில் (Social Interaction) பின்தங்கியவர்களாகவே செயற்படுகிறார்கள்.

**4. தொடர்பு சாதனங்களின் ஆதிக்கம்.**
**(Domination of the mass - media)**

சில திரைப்படங்களில் கதாநாயகர்களாக வேடமேற்று நடிப்பவர்கள் பல பொறுப்பற்ற வேலைகளைச் செய்பவர்கள். சினிமாவிலே கதாநாயகர்கள் செய்கின்ற அட்டூழியங்களை சரியென ஏற்றுக்கொள்வதுதானே இரசிகர்களது இயல்பு. எனவே கதாநாயகன் நவீன முறையில் வீடுகளை உடைப்பான், கட்டிடங்களைத் தகர்ப்பான், சிகரட் புகைப்பான், விஸ்கி குடித்து கோப்பையை எறிவான். இவற்றைப் பார்த்து சுவைக்கின்ற இளையவர், தாங்களும் சினிமா கதாநாயகர் போல வாழத் தலைப்பட்டு பொறுப்புணர்ச்சியற்றவர்களாக மாறிவிடுகின்றனர்.

ஆகவே ஒரு மனிதன் பொறுப்பற்றவனாக செயற்படுகின்றான் என்றால் அதற்கு அவனை மாத்திரமே தீர்ப்பிடவோ, நிந்திக்கவோ முடியாது. மாறாக அவன் அப்படி உருவாவதற்கு ஒரு பின்னணியே இருக்கின்றது. எனவே பொறுப்பற்ற மனிதர்களை விளங்கிக் கொள்வதோடு, பொறுப்புள்ள மனிதர்களை உருவாக்குவதிலே பொறுப்போடு முனைவோம்.

**விமல்**, முருங்கன்

**உலகம் போற போக்கப்பாரு**

"இப்பதான் வருசம் பிறந்ததுபோல இருக்கு அதுக்குள்ள மார்கழி வந்திற்றுது......."

**நான் ஆண்டு 2001ம் முடிந்து விட்டது. எனவே உங்கள் சந்தாவைப் புதுப்பிக்க, ஆரம்பிக்க மறந்துவிடாதீர்கள்.**

**அன்பர்களே நீங்கள் பொறுப்பு மிக்கவர்கள். எனவே எனக்கு கவலையில்லை.**

## காயம் ஏற்பட்ட ரோஜாவிற்கு........

சிறுவர்கள்;
உலகை அலங்கரிக்கும் மலர்கள்
நாளைய நாகரிகத்தின் சிற்பிகள்
சமுதாய வானின் இருளகற்ற – மண்ணில்
முளைத்த விடிவெள்ளிகள்
நாளைய உலகின் விடியல்கள்
எதிர்கால உலகின் தூண்கள்
நாட்டின் இரத்த நாளங்கள்
வெள்ளைக் காகிதங்கள்
விரும்பும் வண்ணம் கிறுக்கி விளையாடுகிறது உலகு,
பாலியல் பலாத்காரம், பாரிடை தொழிலாளி
போரிடை பீரங்கி – இன்னும் எத்தனையோ......
சிறு ரோஜாக்களின் கண்ணீரில்
பல ராஜாக்களின் சாம்ராச்சியம்
சுண்டெலிகள் மீது மதயானைகள் ஊர்வலம்.
அவர்கள் இன்று காயப்பட்ட ரோஜாக்கள்.
விண்ணின் நிலவை ஆராயும் மனிதா!
மண்ணின் நிலவுகளை ஒரு தரம்பார்
எதிர்கால விடியல்களின் அழுகுரலை ஒரு நொடிகேள்.

சூழலும் சமூகமும் சிறுவரை
பனிமலையுமாக்கும்
எரிமலையுமாக்கும்.
சத்தியத்தின் அரவணைப்பில்
மோகன்லால் வளர்ந்தான்
ஆதலால் அகிலம் மகாத்மாவைக் கண்டது.

தந்தையின் கொடுமையில்
வளர்ந்தான் ஹிட்லர் அவனோ
அகிலத்தை எரிக்கும் நாசியானான்
எந்தக் குழந்தையும் பிறப்பில் நல்லார்
பூவாக்குவதும் புயலாக்குவதும் நீயேதான்

ஒளியேற்றுங்கள் – நாளை
மணம் வீசும் மலர்களை வாழவிடுங்கள்
பிஞ்சிலே பறித்து நெஞ்சிலே அடித்து
நஞ்சதை கலக்காதீர்கள்.

இளவலையிலிருந்து
ஸ்நேக · பாரதி.

# பொறுப்புக்கள் - ஒரு முகாமைத்துவ நோக்கு

(Responsibilities - A Managerial View)

அன்ரனி அனஸ்ரின் றோச்
முகாமைத்துவ கற்கைள் நெறி,
பல்கலைக்கழகம் - யாழ்ப்பாணம்.

நிறுவனம் ஒன்றிலே குறிப்பிட்ட நபர் ஒருவருக்கு, குறித்தொதுக்கப்பட்ட வேலையினை, பணியினை, கடமையினை செய்வதற்கான கடப்பாடே பொறுப்பு எனப்படுகின்றது. அதாவது ஒருவருக்கு ஒதுக்கப்பட்ட பணியினை செய்வதற்கான கடமை எனலாம். குறிப்பிட்ட நபர் ஒரு பணியினை செய்து முடிப்பதாக ஒப்புக் கொண்டாராயின், அவரிடம் அப்பணி தொடர்பான பொறுப்பும் காணப்படும். ஒருவர் பொறுப்புக்கேற்ப அதிகாரத்தினைக் (Authority) கொண்டிருக்கும் நிலையிலே தான் தனக்கு ஒப்படைக்கப்பட்ட கடமையினை / பொறுப்பினை சரியாக நிறைவேற்றக் கூடியதாக இருக்கும். ஒரு நிறுவனத்தின் பொறுப்பும் அதிகாரமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக காணப்படல் வேண்டும்.

அதிகாரம் என்பது ஒரு நபருக்கு கொடுக்கப்பட்ட பணி தொடர்பாக அவருக்கு காணப்படும் உரிமையினை குறிக்கும். அதேவேளை பொறுப்பு என்பது குறிப்பிட்ட பணியை செய்து முடிப்பதற்கான கடமையினை குறிக்கின்றது. எனவே நிறுவனங்களில் பொறுப்புக்களுக்கு ஏற்ப அதிகாரமும் வழங்கப்பட்டால்தான், முரண்பாடற்ற சூழ்நிலையில் நிறுவனம் தன்னுடைய இலக்குகளை இலகுவாக அடைந்துகொள்ள முடியும்.

பொறுப்பு (Responsibility) => கடமை.
அதிகாரம் (Authority) => உரிமை.

**பொறுப்புக் கையளிப்பு**
(Delegation of Responsibility)

நிறுவனங்களின் மேல்மட்ட முகாமையானது, தனக்குக் கீழ்மட்டத்தில் உள்ளவர்களுக்கு சில பொறுப்புக்களை நிறைவேற்றும்படி ஒப்படைக்கும் செயற்பாட்டினையே பொறுப்புக் கையளிப்பு என்பர். குறிப்பிட்ட நபர் எவ்வளவுதான் "வினைத் திறமையான முகாமையாளராக" (Effective Manager) இருப்பினும், எல்லாப் பொறுப்புக்களையும் அவரால் தனித்துநின்று நிறைவேற்ற முடியாது. எனவேதான் தனக்குக் கீழ் மட்டத்தில் உள்ள ஊழியர்களுக்கும் பொறுப்புக்களை பகிர்ந்து

வழங்குவதன் மூலம், அவர்களையும் அக்கடமைப்பாட்டிற்கு உட்படுத்தி, திறமையாக நிறுவனத்தின் எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடிகின்றது. இந்த வகையில் பொறுப்புக் கையளிப்பானது முகாமையாளர்களின் வேலைப்பளுவினை குறைப்பதுடன், ஏனைய ஊழியர்களையும் கடமை உணர்வுடன் நிறுவன தொழிற்பாடுகளை முன்னெடுக்கத் தூண்டுவதுடன் நிறுவன நோக்கங்கள், இலக்குகள் என்பன திறம்பட அடையப்படுவதற்கு உதவுகின்றது.

தவிர, முகாமையாளர் தன்னுடைய பொறுப்புக்கள் சிலவற்றை கீழ் மட்டத்தில் உள்ளவர்களுக்கு வழங்கியதும், கீழ்மட்ட ஊழியர்கள் அப்பொறுப்புத் தொடர்பாக ஏதாவது தவறு இழைப்பின், அதற்கு பதில் சொல்ல வேண்டிய கடமை முகாமையாளருடையதே.

*முகாமையாளர் ஒருவர் பொறுப்புக்களில் இருந்து இலகுவாக தப்பித்துக் கொள்ள முடியுமேயொழிய அப்பொறுப்புக்களினால் ஏற்படும் விளைவுகளில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. => "பதில் சொல்லியே ஆகவேண்டும்."*

**முகாமையாளரின் சமூகப் பொறுப்புக்கள்.**

வியாபார நிறுவனங்கள் எப்பொழுதும் சமூகத்தினுடைய ஓர் அங்கமாக விளங்குகின்றன, இயங்குகின்றன. நிறுவனங்கள் தாம் பயன்படுத்தும் உள்ளீடுகள் என்ற வகையில் குறிப்பாக மூலப்பொருட்கள், ஊழியர்கள், பணம், தகவல் முறைகள் என்பன சமூகத்திலிருந்தே பெறப்படுகின்றன. இதன் மூலம் பெறப்படும் வெளியீடுகளான பொருட்கள், சேவைகள் சமூகத்தினாலேயே நுகரப்படுகின்றது. எனவேதான் நிறுவனங்கள் சமூகத்துடன் இணைந்த வகையில் தொழிற்படுகின்றன.

ஆகவே, முகாமையாளர்கள் சமூகத்திற்காக ஆற்றவேண்டிய கடமைப்பாடுகள் சமூகப் பொறுப்புக்கள் (Social Responsibilities) எனப்படும்.

இன்றைய நவீன முகாமைத்துவ சிந்தனையில் நிறுவனங்கள் தம்முடைய நோக்கங்களை வினைத்திறமையாக அடைந்து கொள்ள வேண்டுமாயின், சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் ஊடாகவே சாத்தியமாகும். எல்லா நிறுவன அமைப்புக்களும் இலாபம் உழைத்தல் (Profitability) தொடர்ந்து நிலைத்திருத்தல் (Stability) என்ற நோக்கங்களை கொண்டிருக்கும். இவற்றில் இலாபம் உழைப்பது என்பதனையே நிறுவனங்கள் முன்னைய காலத்தில் கொண்டிருந்த பிரதான நோக்கமாகும். இந்நோக்கினை மட்டும் கூடிய கவனத்தில் எடுப்பின், நிறுவனம் தொடர்ந்து சந்தையில் இருப்பது கடினமானதாகப் போய்விடும். எனவேதான் நிலைத்திருப்பது என்ற நோக்கினையும்

அடைவதற்கு சமூகப் பொறுப்புக்களின் மீது அவை கவனம் செலுத்துவது அவசியமாகின்றது. ஆகவே முகாமையாளர்கள் நிறுவன நோக்கங்களை நிறைவேற்றுவதிலிருந்து விலகிச் செல்ல முடியாது. இந்த வகையில் பின்வருவோருடைய தேவைகள் நிறுவன முகாமையினால் பூர்த்தி செய்யப்படுவது கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

1. ஊழியர்கள்
2. நிதி வழங்குவோர்
3. நுகர்வோர்
4. சமூகமும் சூழலும்
5. அரசு
6. ஏனைய நிறுவனங்கள்.

**ஊழியர்கள்**

ஊழியர்கள் 'நிறுவனத்தின் பணியாளர்கள்' என்பதனால் அவர்களுடைய எதிர்பார்ப்புக்குப் போதுமான திருப்தியை வழங்க வேண்டியது முகாமையின் பொறுப்பாகும். ஊழியரின் சேவைக்கான சம்பளக் கொடுப்பனவுகளை கவர்ச்சிகரமானதாக வழங்குதல், ஊழியர்களை நீதியாக நடத்துதல், அவர்களுடைய கருத்துக்கள், ஆலோசனைகளுக்கு மதிப்பளித்தல், தீர்மானம் எடுத்தலில் பங்குபற்ற வைத்தல், புதிய ஆற்றல்களையும் நுட்பங்களையும் பயிற்றுவித்தல், வினைத்திறனான ஊழியர் உறவுக் கொள்கைகளைப் பேணுதல், ஓய்வு வசதிகளை வழங்குதல் போன்றன ஊழியர்களுக்காக முகாமை நிறைவு செய்யவேண்டிய பொறுப்புக்கள் ஆகும். அத்துடன் நல்ல வேலைச் சூழலை அமைத்துக் கொடுத்தல், தொழிலாளர் சட்டங்களைக் கடைப்பிடிக்கக் கற்றுக்கொடுத்தல், தொழிலாளர் சட்டங்களைக் கடைப்பிடித்தல், முகாமைக்கும் ஊழியருக்குமிடையிலான முரண்பாட்டை தவிர்த்து, அவர்களுக்கிடையிலான நல்ல உறவை பேணுதல் என்பன முகாமையாளரின் ஊழியர் சார்பான பொறுப்பாகும்.

**நிதிவழங்குவோர் / பங்குதாரர்கள்**

நிறுவனமானது நிதி வழங்குவோர் அல்லது பங்குதாரரிடம் இருந்து அதிகளவு நிதியினைப் பெற்றுக் கொள்கின்றது. இப்பங்குதாரர் தாம் முதலீடு செய்த பணத்திற்கு ஒரு சாதகமான வருவாயினை எதிர்பார்ப்பர். அத்துடன் முதலீடு தொடர்பான பாதுகாப்பினையும் எதிர்பார்ப்பர். எனவே முகாமையாளர் இவ்வெதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவது அவர்களது பொறுப்பாகும். அத்துடன் பங்குதாரர்கள் கொள்கைத் தீர்மானங்களில் பங்குபற்றுவதற்கும், நிறுவனத்தின் அலுவல்கள் தொடர்பாக உயர்மட்ட முகாமையிடம் வினா எழுப்புவதற்கான வாய்ப்பினையும் வழங்க வேண்டும். அத்துடன் பங்குதாரர் தாராளமாக விளங்கிக்கொள்ளும்

வகையில் நிறுவனத்தின் பூரண தகவல்கள் வழங்கப்பட வேண்டும். இவை அனைத்தும் நிதி வழங்குவோர் சார்பான பொறுப்புக்களாகும்.

**நுகர்வோர்**

நுகர்வோர் சார்பாக முகாமையாளர் கொண்டிருக்கவேண்டிய சமூகப் பொறுப்புக்களில் நியாயமான விலையில் பண்டங்களை விநியோகிப்பதும், உயர்ந்த தரத்தில் உற்பத்திப்பொருட்கள் அமைவதை உறுதிப்படுத்து வதும் உள்ளடங்கும். எப்போதும் ஒரு உற்பத்திப் பொருள் தொடர்பான நம்பிக்கைத் தன்மை என்பது அப்பொருளின் உற்பத்தி தரத்திலேயே தங்கியிருக்கும். நுகர்வோரைப் பொறுத்த வரையில் அவர்கள் தரும் பணத்திற்கு ஏற்ப தரமான பண்டங்களை வழங்குதல், பண்டங்களின் பாதுகாப்பும் நீண்டகால பாவனையும், விற்பனையின் பின் சேவைகள், நுகர்வோனின் முறைப்பாடுகள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தவேண்டியதும் முகாமையாளருடைய பொறுப்பாகும். அத்துடன் நுகர்வோனின் நீண்ட காலத் திருப்தி, சாதகமான விளம்பரங்கள், நுகர்வோனுக்கு முக்கியமான முழுமையான சந்தேகத்திற்கு இடமில்லாத தகவல் வழங்கல், விற்கப்பட்ட பொருட்களுக்கான உத்தரவாத சான்றுகள் வழங்குதல் என்பன பொறுப்புள்ள முகாமையாளர் நுகர்வோர் சார்பாக நிறைவேற்றவேண்டிய பொறுப்புக்களாகும்.

**சமூகமும் சூழலும்**

சமூகத்தைப் பொறுத்தவரையில் முகாமையாளர் பல தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யவேண்டியிருக்கும். நிறுவனங்கள் அருந்தலாகக் காணப்படும் வளங்களை துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும். சூழல் மாசடைதல், சத்தம், கழிவுகளை வெளியேற்றுதல் தொடர்பாக முகாமையாளர் உரிய கவனம் செலுத்த வேண்டும். மேலும் இறக்குமதிப் பிரதியீட்டுக்கான உற்பத்திகளை மேற்கொண்டு, ஏற்றுமதியை அதிகரிக்கும் பொருட்டு ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில்களில் ஈடுபட்டு அதிக அந்நியச் செலாவணியை உழைத்துக் கொள்ளவேண்டும். இதன் மூலம் வேலை வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளமுடியும். இலாபம் உழைப்பதை மட்டும் முக்கிய நோக்கமாக கொண்டிராது "சமூக சந்தைப்படுத்தல்" எண்ணக்கருவின் அடிப்படையில் சமூகத்திற்கு நன்மை பயக்கும் உற்பத்தியில் ஈடுபட வேண்டும். இவற்றின் மூலம் சமூகத்தினுடைய, சூழலினுடைய தேவைகளை முகாமையாளர் பூர்த்தி செய்யமுடியும்.

அரசு

முகாமையாளர்கள் நாட்டின் அரசு சார்பாகவும் சமூகப் பொறுப்புடையவர்களாக செயற்படவேண்டும். நாட்டின் அரசினால் அமுல்படுத்தப்பட்டுள்ள சட்டக் கட்டுப்பாடுகளை கவனத்தில் எடுத்து,

அவற்றிற்குரிய மதிப்பை வழங்கி, அதற்கமைய நிறுவனத்தின் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுக்க முயலவேண்டும்.

**ஏனைய நிறுவனங்கள்**

ஏனைய நிறுவனங்கள் அல்லது குழுக்கள் என்னும்போது விநியோகஸ்தர் (Suppliers), வியாபாரக் கூட்டாளிகள் போட்டியாளர்கள் போன்றோரை கருதலாம். விநியோகஸ்தரின் கொடுப்பனவுகளை சரியான முறையில் தீர்த்து வைத்தல், சாதகமான போட்டிகளில் மட்டும் ஈடுபடல் போன்றன ஏனைய நிறுவனங்கள் சார்பான முகாமையாளரின் பொறுப்புக்களாகும்.

**முடிவுரை**

ஒரு முகாமையாளர் சமூகம் சார்பாக, சமூக தரப்பினர் மட்டில் கொண்டிருக்கவேண்டிய பொறுப்புக்களை எடுத்து நோக்கும்போது, நிறுவனம் ஒன்றினுடைய நீண்டகால வெற்றி தனியே "இலாபம் உழைப்பது" என்ற நோக்கில் மட்டும் தங்கியிருக்க மாட்டாது. அதைவிட மேலாக "தொடர்ந்து நிலைத்திருத்தல்" என்ற நோக்கிலேயே தங்கியுள்ளது. எனவே நிறுவனம் தொடர்ந்து நிலைத்திருந்து, இலாபம் உழைத்து தன்னுடைய எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை இலகுவாக அடையவேண்டுமாயின் நிறுவன முகாமையாளர்கள் சமூகப் பொறுப்புக்கள் (Social Responsibilities) தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தவேண்டியது இன்றைய நவீன முகாமைத்துவத்தினுடைய புதிய சிந்தனை ஆகும்.

உசாத்துணை :

1- L. M. Prasad, *Principles and practice of Management,* Sultan Chand and Sons Educational Puplishers, New Delhi, 1995.

2- K. Thevarajah *Management*, Higher Education Service Puplicaion, Jaffna, 2000.

# பொறுப்புக்கள் உணரப்படும் போது ..........

**யோசப்பாலா**

உங்கள் கடமைகள், பொறுப்புக்கள் உங்கள் வாழ்வுக்கு வழி காட்டும் திசையறி கருவி போன்றது. இயந்திரம் இயக்கி விட்டாலே இயங்கும். அந்த இயக்கு சக்தியின் வழிகாட்டி கூட மனிதன்தான். மனிதனே சூழலையும், தேவைகளையும் உணர்ந்து பொறுப்புடன் செயல்படும் சக்தி படைத்தவன். உலகில் பொறுப்பு மிக்கவன். மனித பிறவிக்கு பல்வேறுபட்ட நிலையில் பொறுப்புக்கள் உண்டு. வயது, பால் வேறுபட்ட போதும் பொறுப்புக்கள் ஒவ்வொரு நிலையினருக்கும் உண்டு. அவை தன்னில் உள்ள பொறுப்புடன் குடும்பம், தொழில், சூழல், நாடு என தன் வாழ்வின் படிநிலைகளுக்கேற்ப வரையறைகள் சமூக, சமய, தொழில், குடும்ப சூழலாலும் மனிதனிடம் எதிர் பார்க்கப்படுகிறது. இதைவிட தனக்குத்தானே சில பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொண்டிருப்பவரையே நிறைவுள்ள முழு மனிதனாக சமூகம் மதிப்பிட்டுக் கொள்கிறது.

*"குடும்பப் பொறுப்பில்லாமல் சுத்தித்திரியிறான் பார்"*
*"சமூக சீரழிவுக்கு பொறுப்புள்ளவர்களின் அக்கறையீனமே காரணம்"*
*"பொறுப்புக்களை உணராததால் குடும்பம் படுகிற பாட்டைப் பார்"*
*"வேலைத்தலத்தில ஊர்ப் பேச்சைப் பேசி காலம் கடத்தினம், தங்கட கடமைகள் பொறுப்புகளை சரியா செய்யிறதில்லையே"*
*"பிள்ளையளில் பொறுப்பில்ல, ஊர் வம்பு அளக்கிறதிலதான் குடும்பங்கள் சீரழியுது பார்"*

இவை இடத்துக்கிடம் சமூகத்திற்கு சமூகம் வித்தியாசமான முணுமுணுப்புக்களாக கேட்கப்படும் வார்த்தைகள்.

பொறுப்புள்ள வழிகாட்டிகள் சொல் வேறு செயல் வேறாக மாறும் போது கூட உருவாகும் சமூகமும் சீரழிந்த பொறுப்பற்ற தலைமைகளாக உருவாகிறது. இதுவே சமூக தரிசனங்களாக வெளிப்படுகிறன.

வெளியிடங்களில் கேட்கப்படும் வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் பொறுப்புக்களின் பெறுமதிகள் உணரப்படும். அப்பொறுப்புடன் வாழ்வதை ஒவ்வொருவரும் வாழ விரும்பிய போதும் அதன் முக்கிய உணர்வுகளை தம் வாழ்வோடு மீட்டுப் பார்ப்பதில்லை ஏன்?

ஒவ்வொருவரும் மற்றவரின் பொறுப்புக்கள் பற்றி விமர்சிப்பதுடன் நின்று விடாமல் தம் பொறுப்புக்களை உள்ளுணர்வுடன் மீட்டுப் பார்ப்பதே இன்று பொறுப்புக்கள் உள்ள ஆற்றுப் படுத்தலின் முக்கிய தேவையாகவும் இருக்கின்றது.

உடலில் ஏற்படும் நோய் சிறிய அங்கத்தில் ஏற்படும் காயம் போன்றவற்றால் தாக்கப்படுபவர் தன் உடல் முழுவதும் தாக்கத்தை அனுபவிக்கிறார். சிறிய ஒரு காயம் உடல் முழுவதையும் பாதித்து விடுகிறது. ஒருவரின் அசட்டைத்தனம், வேண்டா வார்த்தை, தீய பழக்கம், அவரது நன் மதிப்பை மட்டுமல்ல அவர் சூழ்ந்த குடும்பம் தொழிலகம், பாடசாலை, அச்சமூக சூழலையே குழப்பத்தில் ஆழ்த்தி விடுகிறது. இதை எமது உடலியல் வெளிப்பாடாக கொண்டாலும் உளவியல் தாக்கங்கள் பல வடிவங்களாக உடலை தாக்குவதை உய்த்துணர்ந்தால் உணர்வுகளூடாக புரிந்து கொள்ளலாம். எம் உளம் சார்ந்த சிந்தனையில் ஏற்படும் மாற்றம் கூட எம் உடல் ரீதியாக பல வித தாக்கத்தை தருவதற்கு எமது உள்ளுணர்வுகளில் அடக்கப்பட்ட எண்ணக்கிடக்கைகளை, பொறுப்புக்களை அலட்சியப் படுத்துவதாலே ஏற்படுகிறது. அழுத்தமுள்ளவரிடத்தில் ஏற்படும் குழப்ப நிலையால் பொறுப்புக்கள் உணரப்படுவதில்லை. இதுவே உள நோய்க்கு காலாகிவிடுகிறது.

எம் உணர்வுகளை உணர்ந்து கொள்ளவும் மற்றவர் உணர்வுகளை மதிப்பதற்கும் எமது உளநிலை சமச்சீராக செயல்பட வேண்டும். இதை நாம் முதலில் தமது மனம், செயல், வார்த்தை மட்டில் பொறுப்புள்ள செயலாக சமச்சீரில் இயங்குகிறதா என மீட்டுப் பார்க்க தினமும் ஒரு நேரத்தை ஒதுக்குவதே தியானம், செபம், வழிபாடு என அமைதிச் சூழலில் சுய தரிசனம் செய்யும் நல்வழிகளாகும். அதிலும் குழப்பம் ஏற்பட்டால் அதனை போக்க எம் முரண்பட்ட மனஉணர்வில் ஏற்படும் காரணிகளை இனம் கண்டு நம்பிக்கைக்குரியவருடன் பகிர்ந்து கொள்ளல் எம் சுமைகள் இறக்கப்பட தீர்வு காணப்பட வழி பிறக்கும். இப் பொறுப்பு தங்கள் கேட்போரிடம் மிக அவதானமான ஆற்றுப்படுத்தும் வழியாக பொறுப்புமிக்கோர் என்ற உணர்வோடு நம்பகத்தன்மை காக்கப்படும்போதும் இருவழி தொடர்பாடல் உளநல சமநிலைத்தன் மையால் பொறுப்புக்கள் உணரப்படும்போதும் வாழ்வின் அர்த்தம் உணரப்படும்.

நண்பர்களுக்கும், அன்பர்களுக்கும் நாளின் நத்தார் புதுவருட சோபனங்களுரித்தாகுக.

# ஊர்க்கிளி

ஆசிரியர் ஒருவர் இருந்தார். கற்பித்தலைக் கவர்ச்சியாக வழங்குவதில் கைதேர்ந்தவர். புத்திமதிகளைச் சொல்லுகின்றபோது நாசூக்காகவும் நறுக்கென்றும் சொல்லுவார். *“தலை வாலிற்குச் சொல்லவேண்டுமே தவிர, வால் தலைக்குச் சொல்லக்கூடாது”* என அன்றைய “கீதை”யைத் தொடங்கினார். *இருக்குமிடத்தில் இருந்துகொண்டால் எல்லாம் சௌக்கியமே* என்பது அதன் சாராம்சம்.

*“தலை தான்தோன்றித்தனமாக நடந்துகொண்டால், கடைசி வாலாவது வழிப்படுத்தலாம் அல்லவா”* என்பதும்கூட நியாயமான கோரிக்கையாக இருக்கலாம். குடும்பமாயினும் நிறுவனமாயினும் ஏன் சமுதாயமாயினும் இவ்வாறான பொறுப்புச் சிக்கலுக்கு பலியாகக்கூடும்.

குடித்துவிட்டுவரும் தந்தை, செய்வதறியாத குடும்பம், மூத்தவன் சிறுவனாயினும் குடும்பத்திற்கு முண்டு கொடுப்பதற்காக பொறுப்பைத் தன்கையில் எடுத்துக்கொள்கின்றான். குடும்பத்தலைவனுக்கு அப்பொழுது தான் ஞானம் பிறக்கும். தன் தலைமைத்துவத்திற்கு வைக்கப்பட்ட ஆப்பு என்பது வெளிச்சமாகும். ஆனாலும் இப்படிப்பட்ட அநேகர் தங்கள் வாடிக்கையை விட்டுவிட இதயம் இன்றி (ஈரலும் இன்றி) *தலைக்குமேல் வெள்ளம் இனி சாணென்ன? முழமென்ன?* என வேதாந்திகளாகி விடுவார்கள்.

இதே நிலைமை நிறுவனங்களிலும் அலுவலங்களிலும்கூட உண்டு. ஆனால் ஒரு நிம்மதி. அங்கு குடும்பம் போலல்லாது பதவி மாற்றங்களும் இடமாற்றங்களும் நிலைமையைச் சற்று கட்டுக்குள் வைத்திருக்கின்றன.

சமுதாயக்கடமை மட்டில் இந்த நிலைமை அப்படியன்று. மாறாக சமுதாயக்கடமையில் இருந்து எந்த ஒரு தனியன் தவறுமாக இருந்தால் அதுவே சமூகத்திற்கு நஞ்சாகி தொற்றுநோயாகி சமூகத்தையே வேரறுத்துவிடும். பல்வேறுபட்ட நிலைகளைக் கொண்ட குழுக்களினால் குழுவமைக்கப்பட்ட ஒரு அலகே சமுதாயம். ஒவ்வொரு நிலையினரும் தம் சமூகக் கடமையினை உணர்ந்து பொறுப்போடு அதை நிறைவேற்றுகின்றபோது சமூகம் பூரணப்படும்.

நீதித்துறை, நிர்வாகத்துறை, பொருளாதாரத்துறை, அரசியல்துறை, கல்வித்துறை, கலைத்துறை, வைத்தியத்துறை, வழங்கல்துறை, சமயத்துறை, விசேடமாக தொடர்பூடகத்துறை, போன்றவை தம் சமூகக் கடமையினையும் பொறுப்பையும் உணர்ந்து செயலாற்றவேண்டிய கட்டாயத் தேவையுண்டு. தொடர்பூடகங்கள் இவற்றில் தனிக்கவனிப்புக் காட்டவேண்டும். ஏனென்றால் உலகத்தை ஆக்குவதும் அழிப்பதும் தொடர்பூடகங்களே என்பது என் நம்பிக்கை.

# குடும்பம், உறுப்பினர்களின் பொறுப்புணர்வில் நிலைக்கிறது

– அருட்பணி S.J. இராஜநாயகம். –

குடும்பம், கணவன், மனைவி, தாய், தந்தை; பிள்ளைகள் அன்புறவுடன் கூடி வாழும் ஒரு அமைப்பாக காணப்படுகின்றது. இங்கு அன்பு, பரிவு, பாதுகாப்புணர்வு, ஒன்றுபட்டு வாழ்வது, சகிப்புத்தன்மை ஆகியவற்றை காணலாம். பாலியல் உறவு திருமண முறையால் நிறுவனமாகின்றது. இந்தக் குடும்பம் குழந்தைப் பேற்றுக்கும் வளர்ப்பிற்கும் இன்றியமையாதது. குடும்பத்தில் உறவுகள் நிரந்தரமாகின்றது. குடும்பத்தை நாம் பல கோணங்களிலிருந்து வருணித்தாலும் ஒரு குடும்பம் அன்பை அடிப்படையாகக் கொண்டு வாழும்போது அங்கு பல பொறுப்புக்கள் உருவாகின்றது. இந்தப் பொறுப்புக்களை கணவன், மனைவி, தாய் தந்தை, பிள்ளைகள் தங்களின் நிலையைப் பொறுத்து ஏற்றுக் கொண்டு செயல்படுகின்றனர். இப்படி பொறுப்புகளை ஏற்றுச் செயற்படும் போது ஒரு குடும்பத்தில் சமநிலை பேணப்படுகின்றது. குடும்பத்தில் அமைதி, சந்தோசம் நிலவுகின்றது. குடும்ப அங்கத்தினர் உடல், உள வளர்ச்சியும், நிறைவும் அடைகின்றனர். குடும்பத்தில் பொறுப்புகள் ஏற்கப்படாதிருக்கும்போது அல்லது நிராகரிக்கப்படும் போது அங்கு குடும்பச் சமநிலை இழந்து அமைதியின்மையும், கோபங்களும் வன்முறைகளும் அதிகரிக்கின்றன.

**கணவன் - மனைவியின்பொறுப்புணர்வு:**

குடும்ப வாழ்வில் புகும்போது ஒரு ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாகின்றனர். அன்பின் அடிப்படையில் ஒன்று சேரும் இவர்கள், குடும்பப் பொறுப்பை ஏற்கின்றனர். இருவரும் பொறுப்புக்களைப் பகிர்ந்து வாழ்கின்றனர். இந்தப் பொறுப்புக்களை கணவன் - மனைவி நிறை வேற்றுகின்றபோது அங்கு அவர்கள் தாம் பாதுகாப்பாக இருப்பதாக உணர்கின்றனர். ஒருவரின் உடல், உள, உணர்வுத் தேவைகளை மதித்து அவற்றை ஏற்று நிறைவேற்றுகின்றனர். இதுவுமல்லாமல் பொருளாதாரத்தை விருத்தி செய்து ஒருவரொருவரின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யும் போது அங்கு பொருளாதாரப் பாதுகாப்பைப் பெறுகின்றனர். பாதுகாப்பு என்பது கணவன், மனைவி யிடத்திலிருக்கும் ஒரு அடிப்படை உணர்வு. இருவரும் பொறுப்புடன்

செயல்படும்போது இந்த உணர்வு தோன்றுகின்றது. எதிராக செயற்படுகின்றபோது இந்த பாதுகாப்பு என்ற உணர்வு அற்று அங்கு பயம், பதட்டம், நித்திரையின்மை, இதயப்படபடப்பு போன்றவைகள் வந்து சேருகின்றன.

கணவனும் மனைவியும் ஒருவர் ஒருவருக்காக வாழும் போது அங்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. இந்த மகிழ்ச்சி நிலைக்க ஒருவர் மற்றவருக்கு தன் கடமைகளைப் பொறுப்புடன் ஆற்ற முன்வர வேண்டும். இங்கு வெளியாரின் செல்வாக்குக்கோ அல்லது குறுக்கீடுகளுக்கோ இடமளிக்கக்கூடாது. வெளியாரின் தலையீடு கடமைகளைச் செய்ய தடையாக இருக்குமென்றால் கணவன் - மனைவி உறவைத் தாக்கும், உறவில் விரிசல் ஏற்படும். இப்படியான ஒரு சூழலில் கணவன் - மனைவியின் ஆளுமை வளர்ச்சி குன்றும். ஒருவரொருவரில் குறைகள் கண்டு, இழிவுபடுத்தும் செயற்பாடுகள் ஏற்படும். முடிவில் இவர்களின் குடும்பத்தில் சமநிலை இழந்து, குடும்பத்தில் அமைதியிழந்து தவிப்பர்.

கணவன்-மனைவி தன் பொறுப்புக்களை உணர்ந்து, தெரிந்து செயற்படுவது மிகவும் முக்கியமாகின்றது என்பது இதனால் புலனாகின்றது. குடும்ப வாழ்வு எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க கணவன் - மனைவி எப்போதும் மற்றவர் நலம் நாடி, அவரின் மட்டில் தனது கடமைகளை நிறைவேற்றி வாழ வேண்டும். இப்படியாக இருந்தால் அவர்கள் உறவு வளரும், நிலைக்கும்.

அடுத்து பெற்றாரின் வார்த்தைகள் தங்கள் அன்புறவில் வாழும் குழந்தைகளுக்கு மிகவும் முக்கியமானவை. அவர்களின் உருவாக்கத்திற்கு மிகவும் இன்றியமையாதவை. கார்ல் றொஜர்ஸ் (Carl Rogers) கூறுவது போன்று ஒரு மரம் சூரியனை நோக்கி வளர்கின்றது. அப்படி வளர்கின்றபோது அது நிறைவடைகின்றது. இந்த உலகத்தில் வாழுகின்றவர்கள் எல்லோரும் நிறைவை நோக்கித்தான் வாழ்கின்றனர். அதற்குப் பெற்றார்கள் வழிவகுக்க வேண்டும். தனது செயல்பாட்டினால் மாதிரிகைகளினால், பிள்ளைகள் வளர்வதற்குரிய நல்ல சூழலை கொடுக்க வேண்டிய பொறுப்பு பெற்றாரினுடையதே.

**கலாச்சாரத்தை பிள்ளைகளுக்கு வழங்குதல்:**

சமூக கலாச்சாரம் பழக்கவழக்கங்களும், சட்டதிட்டங்களும் குடும்பத்தைக் கட்டுப்படுத்துகின்றன. சமூகத்தில் குடும்பம் ஒரு சக்திமிக்க

நிறுவனம். திருமணம் சமூகத்திற்கு மிகவும் முக்கியம். இதை எளிதில் உடைத்து விட முடியாது. எனவே இங்கு இத்தகைய கலாச்சாரத்தை சமுதாய குடும்ப மதிப்பீடுகளை கணவன் - மனைவி, பெற்றார் தாமும் வாழ்வதோடு அதைச் சிறப்பாக பிள்ளைகளுக்கும் கொடுக்கும் பொறுப்பு பெற்றாரின் கடமையே.

ஒரு குடும்பத்தில் பெற்றார்கள் தாமும் வாழ்ந்து, குழந்தைகளுக்கும் வாழக்கற்றுக்கொடுக்க வேண்டும். அன்பு, பாசத்தின் அடிப்படையில்தான் குடும்ப வாழ்வு கட்டியெழுப்பப்படுகின்றது. இங்கு நெருங்கிய அன்புறவு இல்லாமை பல ஆளுமை, உணர்ச்சி சார்ந்த குறைபாடு களுக்கும் நோய்களுக்குக் காரணமாகின்றது. குடும்பத்தில் மதம் சார்ந்தவைகளும் செல்வாக்கு செலுத்துகின்றது. மதம் சார்ந்த மதிப்பீடுகளைத் தாமும் வாழ்ந்து பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுத்தல் மன அமைதிக்கு வழிவகுக்கும். சமூகப்பழக்கங்களை கற்றுக் கொடுத்தல் சமூகத்தில் கட்டுப்பாட்டுடன் வாழவும், பிறரை மதிக்கவும் முக்கிய வழியாகின்றது. அன்பு, ஒத்துழைப்பு, சகிப்புத்தன்மை, தியாகம், கீழ்ப்படிதல் என்பன சமூக உறவுக்கான குணங்கள். இவைகளையும் கற்றுக் கொடுத்தல் முக்கியமாகின்றது. இது மட்டுமல்ல குழந்தைக்குச் சிறந்த கல்வியைக் கொடுக்கும் பொறுப்பும் பெற்றாரினுடையதே. குழந்தைகளும் அதைப் பெற உரிமையுடைத்தோராக இருக்கின்றனர். அவைகள் எல்லாவற் றையும் உணர்ந்து பொறுப்புணர்வுள்ள குடும்பமாக வாழும்போது, குடும்ப வாழ்வு நிலைக்கின்றது.

## "நான்" ஆண்டு – 2002

**புலரவிருக்கும் புத்தாண்டில் "நான்" கொண்டுவருவன**

| | | |
|---|---|---|
| 2002 | தை – மாசி | - குற்றவுணர்வு |
| 2002 | பங்குனி – சித்திரை | - (பொதுத்தலைப்பு) |
| 2002 | வைகாசி – ஆனி | - தன்னம்பிக்கை |
| 2002 | ஆடி – ஆவணி | - (பொதுத்தலைப்பு) |
| 2002 | புரட்டாதி – ஐப்பசி | - இலக்கமைத்தல் |
| 2002 | கார்த்திகை – மார்கழி | - முகம்கொடுத்தல்/முன்னெடுத்தல் |

# தொடர்பூடகங்களில் பெண்கள் - ஒரு விமர்சன நோக்கு

ந. நிறைந்தினி
சமூகவியல் சிறப்புக்கலை, யாழ். வளாகம்.

இன்று தொடர்பூடகங்கள் எனும்போது எம் நினைவில் தோன்றுபவை பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி, சினிமா, வீடியோ, கணனி என்பனவாகும். இவை சமூகத்தின் சமகால வாழ்வியலை, சமூகத்தின் கருத்துக்களைச் சித்தரிக்கும், வெளிக் கொணரும் குறிகாட்டிகளாக அமைகின்றன. அத்துடன் இவ் வூடகங்கள் கொண்டுவரும் செய்திகள், நிகழ்ச்சிகள், சித்தரிப்புக்கள் சமுதாயத்தின் அன்றாட வாழ்க்கைப் போக்குகளைப் பிரதிபலிப்பனவாக அமைவதால் இவ்வூடகங்கள் பயனாளிகள் மத்தியில் பெரும் செல்வாக்கு உடையனவாக உள்ளன.

இத்தொடர்பு சாதனங்களும் அவற்றின் உள்ளடக்கங்களும் மேலை நாடுகளின் தாக்கத்தினால் மாற்றமடைந்த போதும் பெண்கள் பற்றியதான சித்தரிப்பில் மாற்றம் ஏற்படவில்லை. அதாவது இவற்றினூடாக பெண்களின் சுயத்தை மறுதலிக்கும் தன்மையே காணப்படுகிறது. குறிப்பாக விளம்பரங்களிலே பெண்கள் பாவனைப் பொருட்களாக, கவர்ச்சிப் பொருட்களாக விற்பனைப் பண்டங்களோடு விளம்பரப்படுத்தப் படுகின்றார்கள். சஞ்சிகைகள், விளம்பரப் பலகைகள், சுவரொட்டிகள், திரைப்படங்கள் போன்றவற்றில் பெண்கள் பற்றிய, யதார்த்தத்திலிருந்து விடுபட்ட தரக்குறைவான படிமப்படுத்தப்பட்ட ஆண்நிலைக் கற்பனைச் சித்திரிப்புக்களே இடம் பெறுகின்றன. இச் சித்தரிப்புக்கள் மாநகரிலிருந்து சேரிப்புறம்வரை கொண்டு செல்லப்படுகின்றன.

## தொலைக்காட்சி :-

அண்மையில் மிகக்குறுகிய காலகட்டத்துக்குள் வளர்ச்சியடைந்து வந்துள்ள தொலைக் காட்சி ஊடகம்கூட பெண்களைப் பற்றிய தவறான சித்தரிப்பையே கொண்டுள்ளது. அதாவது அடங்கிப் போகும் பெண்களையும், வீட்டுப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் பெண்களையும், கவர்ச்சியாக உடல்காட்டி நிற்கும் பெண்களையுமே தொலைக்காட்சி விளம்பரங்கள் வெளிக்காட்டி நிற்கின்றன. அத்துடன் ஆண்களின் உப யோக பொருட்களுக்கான விளம்பரங்களிலும் பெண்களே அதிகமாக பயன்படுத்தப்படுகின்றனர். விளம்பரங்களில் பெண் இலட்சிய மனை வியாக, தாயாக அல்லது வீட்டு வேலை செய்பவளாகவே சித்தரிக்கப் படுகின்றாளேயொழிய உயர்நிலையாக சித்தரிக்கப்படுவதில்லை.

*உதாரணமாக அங்கர், நெஸ்பிறே போன்ற பால்மா தயாரிப்பக்களில் பெண் சிறந்த தாயாகவே சித்தரிக்கப்படுகிறாள்.*

இதனைவிட விளம்பரங்களில் காட்டப்படும் பெண், மெல்லியதான, பளபளப்பான, அழகான, ஆரோக்கியமான உடலமைப்பு வரையறை களைக்கொண்ட இலட்சியப்பெண் (Ideal women) ஆகவே இருக்கின்றாள். இங்கு இலட்சிய உடல்வாகு (Ideal body) என்பது பாலியல் கவர்ச்சியைக் காட்டுகிறது. இச் செயற்பாடு பெண்களை மேன் நிலையை அடையச் செய்வதற்கு பதில் இழி நிலைக்கு தள்ளுகின்றது. இது பற்றியதான யுனெஸ்கோ அறிக்கையொன்றில் *"விளம்பரங்களில் வருகிற பெண்கள் எப்போதுமே இளமையானவர்களாகவும், கவர்ச்சிகரமாகவும் இருக்கின் றனர். பல சந்தர்ப்பங்களிலும் அவர்கள் கவர்ச்சிப் பொருட்களாக மட்டுமே காண்பிக்கப்படுவது தவிர அறிவு ஜீவிகளாக காண்பிக்கப்படுவ தில்லை. அறிவு ஜீவிகளாக இருப்பது ஆண்களாகவே நினைக்கத் தூண்டுகின்றது"* என குறிப்பிடப்பட்டுள்ளது.

**பத்திரிகைகள் :-**

பத்திரிகைகளில் பெண்களுக்காக ஒதுக்கப்படும் பக்கங்கள் பின்வரும் தன்மைகளின் அடிப்படையில் காணப்படுகின்றன.

1. முற்றுமுழுதான சமையல் குறிப்பு
2. அழகுக் குறிப்பு
3. அரைகுறை ஆடைகளை அணிந்து வெளிப்படுத்தும் பெண்களின் படங்கள் (சினிமா பகுதி)
4. வீட்டை நிர்வகிப்பதற்கான ஆலோசனைகள்..........

இத்தலைப்புகளினூடாக வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள் கூட ஓர் ஆணைத் தன்பால் ஈர்த்து வைத்திருப்பதற்கான வழியையே கூறுகின்றன. இன்று திருமணம் சொர்க்கத்தில் நிட்சயிக்கப்படுகின்றது என்பதற்கு பதிலாக பத்திரிகைகளினூடாக நிட்சயிக்கப்படுகின்றது எனக்கூறுமள விற்கு பெண்கள் பற்றியதான சித்தரிப்பு காணப்படுகிறது (மணமகள் தேவை விளம்பரப் பகுதி).

**சினிமா :-**

சினிமாவானது பொழுதுபோக்கை மட்டும் நோக்காக கொண்ட ஒரு ஊடகமாகும். இதில் பெண்களை கவர்ச்சிப் பொருட்களாக, ஆபாச இலக்குகளாக காட்டி வியாபார இலாபங்களை பெறும் தன்மை சினிமாவில் அதிகரித்துள்ளது. இச் சாதனங்களினூடாக வெளிவரும் சண்டைக் காட்சிகள், கேலிகள், பாலியல் செயற்பாடுகள் என்பன இன்று சிறியோர் தொடக்கம் பெரியோர் வரை பாதிக்கும் தன்மையை கொண்டுள்ளன. இது சமுகத்தை அதிகளவு பாதிக்கின்றது.

எனவே இத்தொடர்புச் சாதனங்கள் பெண் விம்பங்களையும் இலட்சிய பெண்பாத்திரங்களையும் உருவாக்குவதோடு மட்டுமல்லாமல் பாலியல் கவர்ச்சியுடைய கட்டங்கள், பலாத்கார, வன்முறைக் காட்சிகள் என்பவற்றைக் காட்டுவதன் மூலம் வன்முறை உணர்வை தூண்டி விடுவது மட்டுமல்லாது, இளைஞர்களையும் யுவதிகளையும் ஒரு கற்பனை உலகில் சஞ்சரிக்கச் செய்துவிடுகின்றது. இங்கு நடைமுறை வாழ்வு ஒன்றாகவும் ஊடகங்களில் வரும் செய்தி வேறொன்றுமாக இருக்க இளைஞர் மத்தியில் பகற்கனவே அதிகரித்துள்ளது.

பொதுவாக ஊடகங்களில் பெண்பற்றிய பாரபட்சம் காட்டப்பட்டபோதும் சில ஊடகங்களில் பெண்கல்வி, வேலைவாய்ப்பு, பெண்மேம்பாடு போன்ற சிறந்த விடயங்களும் கூறப்பட்டுள்ளன. சினிமாவினூடாகவும் பெண்பற்றியதான புரட்சிகரமான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. *அச்ச மில்லை அச்சமில்லை, வீடு, புரட்சிக்காரன், புதுமைப்பெண்* போன்ற தமிழ்ப்படங்கள் இவற்றுக்கு உதாரணங்களாகும்.

எனவே பெண்ணானவள் மேம்பாடு அடைவதற்கு மாதர் அபிவிருத்திச் சங்கமோ, மகளிர் அமைப்புகளோ தமது சேவை வழங்கினாலும் கூட ஊடகங்களில் பெண்கள் பற்றியதான நல்ல சித்தரிப்பு வெளிவர வேண்டும். அப்போதுதான் சமூகம் அவளை நற்கண்ணுடன் நோக்கும். அத்துடன் ஊடகங்களில் வரும் கருத்துக்களை ஒவ்வொருவரும் விமர்சன ரீதியாக நோக்குதல் வேண்டும். பெண்களை இழிவுபடுத்திவரும் இதழ்கள் நிராகரிக்கப்படுவதால் அல்லது பெண்களை பயன்படுத்தும் முறையில் மாற்றம் கொண்டுவருவதனூடாக பெண்களையும் ஒரு சமூக பிராணியாக ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்படும்.


உசாத்துணை நூல்கள் :-

1. சந்திரிகா சோமசுந்தரம், *மக்கள் தொடர்பு சாதனமும் மகளிரும்.*
2. ம. நதீரா, *தொடர்புடகங்களில் பெண்கள் பற்றிய சித்தரிப்பு எந்தளவுக்குப் பெண்களைப் பாதிக்கிறது?*, பெண், 1998.
3. N. சண்முகலிங்கம், *கனவுகளிலிருந்து வாழ்வுக்கு தொலைக்காட்சி தொடர்பான சமூக உளவியல் தரிசனம்*, பொன்விழா மலர் வசாவிளான் ம. ம. வித்., 1995.
4. Elliot Aranson, *The Social Animal*.

# யார் பொறுப்பு?

**பொறு, இப்போதைக்கு அது இருக்கட்டும்.................... இக்கதையைக் கேளு.**

அண்மையில் வயோதிபப் பெண் ஒருவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சந்திக்க நேர்ந்தது. முதுமையும், இயலாமையும், நோயும் சேர்ந்து கொஞ்சம் தளர்ந்த நிலையிலேயே காணப்பட்டாள். தான் நினைப்பதை மற்றவர்களுக்குச் சொல்லுவதில் சிலவேகைளில் தெளிவின்மையும், தடங்கல்களும் இருந்தன. அவ்வப்போது முரண்பாடான கருத்துக்களைக் கூறினாலும் அவ்வயது முதிர்ந்த தாயின் கதையினிலே சமுதாயம் அறிந்துகொள்ள வேண்டிய பல விடயங்கள் இருந்ததை உணர்ந்தேன்.

இக்கதை, ஒருவகையில் ஒரு பக்கச்சார்பானதுதான். மறுபக்கத்தை எட்ட முடியாத நிலை. அப்படி இருந்தும் இத்தாயின் கதையை அறிந்துகொள்வதில் பல அர்த்தங்கள் இருக்கின்றன என்பதால் தொடர்கிறேன்.

திருமணம் முடித்ததாகச் சொல்லுகின்றாள். திருமணமாகி ஆரம்ப நாட்களிலேயே கணவனின் குடிப்பழக்கத்தினால் உண்டான கொடுமைகளின் காரணமாக குடும்ப வாழ்வினை விட்டுவிட்டதாகக் குறிப்பிடுகின்றாள். இளமையிலேயே தன் குடும்பத்தைப் பிரிந்து இன்னொரு குடும்பத்திலே பணிப்பெண்ணாக இணைந்து கொள்கிறாள். இக்குடும்பத்தில், வீட்டுத்தலைவன் (அரச ஊழியன்), தலைவி, பிள்ளைகள், பிள்ளைகளுள் சிலர் இப்போது வெளிநாடுகளில் இருக்கின்றார்கள்.

இப்போது இத்தாய்க்கு எழுபத்திநான்கு (74) வயது. அவளின் கூற்றின்படி ஏறக்குறைய கடந்த நாற்பது (40) வருடங்களாக பணிப்பெண்ணாக அக்குடும்பத்தோடுதான் அவளின் சீவியம். அவள் வாழ்நாள்களில் அரைவாசிக்கு மேல் அக்குடும்பத்தோடு முடிந்திருக்கிறது. இந்த நாற்பது (40) ஆண்டுகளும் அவ்வீட்டில் கூட்டுவது, துடைப்பது, தோய்ப்பது, சமையல், சங்கக்கடை, சாமான் வாங்குவது என்று கழிந்திருக்கிறது! .....

அவளுக்கென்று சொத்துக்கள் இருப்பது சந்தேகமே. சந்தேகத்திற்கு இடமின்றி இருப்பதோ உடுத்த ஒருசில துணிமணிகள், இரண்டு மூன்று வெற்றுப் போத்தல்கள், சாப்பிட ஒரு கோப்பை, குடிக்க ஒரு 'ரம்ளர்' ஆகியவற்றோடு கூட ஐ. சியும் (Identity Card) உண்டு.

தற்போது, காயம் ஒன்றிற்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றாள். வீட்டுத் தலைவனைத் தவிர அப்போது வீட்டில் யாரும் இல்லாத காரணத்தினால் அவள் இன்னொருவரின் உதவியுடன் வைத்திய சாலைக்கு வந்திருக்கிறாள்.

நாற்பது (40) ஆண்டுகள் குடும்பத்தில் ஒருத்தியைப்போல வாழ்ந்து பணிபுரிந்தவளுக்கு வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறவென்று வந்தவளுக்கு கொடுக்கப்பட்ட பணத்தின் தொகை 30 ரூபாய் மட்டுமே. ஒரு வருடத்திற்கு 1. 30 சதம் வீதம் விழுந்திருக்கிறது போலும்!..... எனக்கு வயது 35. எனது தாய், தந்தையுடனான தொடர்பு ஆகக்கூடியது 36 ஆண்டுகளே!.... ஆனால், அதனைவிட இந்த அம்மா இக்குடும்பத்தோடு இவ்வளவு நீண்ட கால உறவிருந்தும் இப்போது..." என்று கவலையோடு சொல்லிக்கொண்டிருந்தாள் அத்தாயை அன்போடு பார்த்தெடுக்கும் ஒரு தாதி.

இத்தாயைப் பார்க்க வீட்டுத்தலைவன் ஒரே ஒரு தடவை வந்திருக்கின்றார், கரடி பிறை கண்டதுபோல. அதனால், அவள் பெற்றுக்கொண்டது ஒரு ரீ (தேனீர்), ஒரு பிஸ்கட் பெட்டி, 10 ரூபாய் காசு. "இப்ப.... என்ன அவசரம் வருத்தம் மாறவிட்டு ஆறுதலா வாவன்" இது அவர் அவளுக்குக் கொடுத்த "அட்வைஸ்" (ஆலோசனை).

இந்நிலையில் அவள் இறந்துவிட்டால் (நான் விரும்பவில்லை. ஆனாலும்....) அடுத்த நாள் பத்திரிகையில் "அரச செலவில் அடக்கம்" என்பதோடு இறுதிக் கிரியைகள் இலவசமாகவே முடிந்திருக்கும்!.....

அப்படி நடக்காத பட்சத்தில் "அன்னை திரேசா..." என்று தொடர்ந்தார்கள். "அவள் இறந்து ஐந்து வருடங்கள் ஆகப்போகின்றது" என்றேன். "இல்ல.... அன்னை திரேசா சிஸ்ரமாரிடம் இந்த ஆச்சியை சேர்க்க...." இவ்வில்லத்தை நம்பி அந்த ஜீவன் இன்னும் மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறது!......

"என் சமூகமே உன் பதில் என்ன?" இது என் கேள்வி அல்ல. இந்தத் தாய் கேடகத் துடிக்கிறாள், முடியவில்லை. அதனால், அவ்வம்மாவின் உணர்வுகளுக்கு வார்த்தைகளை போட்டுப் பார்த்தேன். அவ்வளவுதான். அது இப்படி வினாவாக அமைகிறது.

செ. அன்புராசா, அ. ம. தி.

## குடை எதற்கு

எனக்கு எதற்கு குடை
இளமையின் எதிர்பார்ப்புக்கள்
இயலாமைத்தீயில் எரிந்து
இருப்பிழந்து சாகிறது
இதைவிடவா வெய்யோனின்
வெம்மை என்னை வாட்டி
வரட்டப்போகின்றது?

ஹும் ... மழையாம் மழை
அந்த அழுமேகம் கூட
என் கண்களைத்தானே
நீரேந்து வெளியாய்
நம்பியிருக்கின்றது – இனி
நனைவதற்கு ஏதிருக்கு?
எனக்கு எதற்கு குடை

J.A.ஷெரீன்
பண்டாரவளை.

# பொறுப்பில் ஆதவர்கள்

**கிருபா**

நாம் இவ்வுலகில் பிறந்தவுடனேயே எம்முடன் பொறுப்புக்களும் சேர்ந்து பிறக்கின்றன. அனேகமாக நாம் எம்மைத் தவிர்ந்த பிற சூழலிலேயே பொறுப்பைத் தேடுகின்றோம். உண்மையில் நாம் வெளிச் சூழலில் பொறுப்பெடுக்குமுன் எம்மட்டில் நாம் பொறுப்பெடுப்பதென்பது எம்மை நாமாக உயர்த்த வழி சமைக்கும்.

உடலியக்கங்கள் அனைத்தும் தத்தமது வேலைகளை அதனதன் வேளையில் கடமைதவறாது நிகழ்த்துவதாலேயே நாம் இன்று உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சில வேளைகளில் அவை தமது பொறுப்புக்களைச் சரிவரச் செய்ய மறுக்குமேயானால் நாம் எவ்வாறிருப்போம்? எனவேதான் பொறுப்புக்கள் எம்முடன் கூடிப் பிறந்ததென கூறுவர்.

பொறுப்புக்களை ஏற்பதுவும் அவற்றைச் சரிவரச் செய்து முடிப்பதுவும் ஓர் இன்பம் தரும் அனுபவமாகும். ஒவ்வொரு பொறுப்பையும் சரிவர எடுத்து முடிக்கும் ஒருவனே ஒரு சிறந்த தலைவனாக உருவாக முடியும். பொறுப்புக்கள் எடுக்கும் பொழுது கீழ்வருவனவற்றை கவனத்தில் கொண்டால் முடிவுகள் சரியானதாகவும் பெறுமதியானதாகவும் அமைய வாய்ப்பிருக்கும்

1. தன் நிலையறிவு

ஒருவன் தன்னைப்பற்றிய அறிவைக் கொண்டே பொறுப்புக்களை எடுக்கத் துணிய வேண்டும். தனது திறமை, அனுபவம், ஆளுமை எப்படிப்பட்டதென அறிந்துகொண்டு அதன் அடிப்படையில் பொறுப்புக்களை ஏற்றால் மட்டுமே அவற்றை திறம்பட நிறை வேற்ற ஏதுவாக அமையும். அல்லாமல் தன் நிலைக்கு மீறிய பொறுப்புக்களை ஏற்று *"குருவியின் தலையில் பனங்காய்"* போல பொறுப்புக்களால் நாம் நசிந்து விடும் நிலை வராமல் பாதுகாத்தல் அவசியம்.

௨. அனுபவம்

பொறுப்புக்களை ஏற்கும் முன்னதாக அப்பொறுப்புக்கள் உரித்தான அனுபவங்களைப் பற்றி ஆய்ந்தறிவதும், பொறுப்பேற்று வெற்றி பெற்றவர்களின்

அனுபவங்களைக் கேட்டறிந்திருப்பதும் அவசியம். அப்போதுதான் எடுக்கும் பொறுப்போடு காரியங்களிலுள்ள நெளிவு, சுழிவு தெட்டத்தெளிவாகும்.

3. நேரம்

பொறுப்புக்களை ஏற்கும் ஒவ்வொரு நபருக்கும் தனது நேரத்தை குறித்ததான முழு தகவல்களும் தெரிய வேண்டும். நம்மில் பலர் பொறுப்புக்களையேற்பர் ஆனால் அவற்றை முடிக்க நேரம் போதாமல் திண்டாடுவர். எனவே எனது நேர ஒதுக்கீடு எவ்வளவு? நான் செலவளிக்க வேண்டிய நேரம் எவ்வளவு, எவ்வளவு கால எல்லை என்பதைக் குறித்தான நேரசூசி எப்போதும் பார்வைக்கு தயாராக வைத்திருக்க வேண்டும். (நேரசூசியில் ஓய்வு நேரமும் உள்ளடக்கப்படடல் வேண்டும்)

4. முன் ஆயத்தம்

நாம் பொறுப்புக்கள் எடுக்கும் முன் சில முன் ஆயத்தங்களை மேற் கொள்ள வேண்டும். நாம் செயற்படும் போது பார்த்துக் கொள்ளலாம் என்றோ, பிரச்சினை வரும் போது சந்திக்கலாம் என்றோ அசட்டையாக விட்டுவிட்டால் எமது செயற்பாடு ஸ்தம்பிதமடைவதுடன் நாம் எடுக்கும் பொறுப்புக்களும் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

5. இலக்கு

நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தினதும் இலக்கு தெளிவானதாகவும் எடுக்கும் ஒவ்வொரு அடியும் அதை நோக்கியதாகவும் இருத்தல் என்பது எமது பொறுப்புக்களை சரிவரச் செய்ய வழிவகுக்கும். நாம் பொறுப்பெடுக்கும் போதே இலக்குகளை குறித்துக் கொள்வது எம்மை சரியான வழியில் இட்டுச் செல்ல துணைசெய்யும்.

நாம் வழமையாக பொறுப்பென்று கூறாமல் பொறுப்புணர்வு என்றே கூறுகின்றோம். பொறுப்பென்பது ஓர் உணர்வாகும். இவ்வுணர்வு தூண்டப்பட வேண்டியதொன்றாகும். எமது பிள்ளைகளிடம் நாம் இவ்வுணர்வைத் தூண்ட வேண்டும். நமக்குள் இருக்கும் பொறுப்புணர்வை வளர்த்துக் கொள்ளல் வேண்டும். இதனால் நாமும், குடும்பமும், நாடும், வளம் பெறும்.

❄

# பொறுப்பாக நடந்து கொள்ளுங்கள்

பொறுப்பற்றோரின் செயல்களுக்கு
காட்டப்படும் சிவப்புக்கொடி எதிர்ப்பு இயக்கம்.
உழைக்காமல் பணம் சேர்ப்பது
உழைப்பவரைக் கொள்ளையிடுவது
இருப்பதை பகிராமலிருப்பது
இல்லாரை மதிக்கமறுப்பது
உரிமையை கேட்க மறுப்பது
உயிர்காக்க பயந்து வாழ்வது
உயிர்வாழ்வு ஏனென்று கேட்பது
காசைக் கடவுளென்று வாழ்வது
ஆசைக் கடிமையாகி அழிவது
சுயநலம் கொண்டோராய் மகிழ்வது
சுற்றியுள்ளோரை நிதம் ஏமாற்றுவது
வாருங்கள் சிவப்புக்கொடிகளுடன்
பொறுப்புடன் வாழப்பழகுவோம்.
நாம் வாழ்ந்தால்
நம் மண்ணகமே பொறுப்புள்ளதாகிவிடும்
ஏனென்றால்
பொறுப்புடன் வாழ்வோரால் மட்டுமே
பொறுப்புள்ள சமுதாயத்தை
உருவாக்க முடியும்.

அருட்திரு S. D. P. செல்லன்
ஹொறவப் பொத்தான வீதி,
வவுனியா.

# கருத்துக்குவியல் – 88

**தற்கால தமிழ் சமூகத்தில் ஆண், பெண் இருபாலாரும் பொறுப்புக்களை போதியளவு பகிர்ந்து கொள்ளுகின்றனர்.**

**குவியல் – ஒன்று**

தற்கால தமிழ் சமூகத்தை நாம் சற்று உற்றுநோக்குவோமாயின் அது பல்வேறுபட்ட சமூக அழுத்தங்களினால் மிகவும் பிளவுபட்ட நிலையில் இருள்மயமான எதிர்காலத்தையே நோக்கிச் செல்லுவதை காணக்கூடியதாக உள்ளது.

எம் சமுதாயம் ஒரு "புதுவடிவமைப்பு" பெற்றுவிட்டது என்றால் அது மிகையாகாது. பொறுப்புக்கள் நாம் விரும்பியோ விரும்பாமலோ எம் (ஆண், பெண்) மேல் சுமத்தப்பட்டுள்ளன. கணவனை இழந்த மனைவி தன் குழந்தைகளை காப்பாற்ற வேண்டும். கணவன் தன் மனைவி பிள்ளைகளை பாடுபட்டு காத்துவளர்க்கவேண்டும். இவற்றினூடாக "சமத்துவம்" என்ற பதம் எம் சமூகத்தில் ஒரு யதார்த்த நிலையை எட்டிவிட்டது என்று கூடக் கூறலாம்.

இது ஒரு புறம் இருக்க, சமூக பொருளாதார நெருக்கடிக்கு உட்பட்டிருக்கும் எம் சமூகம், அதை நிவர்த்தி செய்யும் பொருட்டு இரு பாலாரும் பொறுப்புக்களை ஏற்றாக வேண்டும். இதுதான் எம் தமிழ் சமூகத்தின் இன்றைய நிலைப்பாடு. ஆண், பெண் இருபாலாரும் இந்த வகையில் தம் பொறுப்புக்களை போதியளவு பகிர்ந்து கொள்கின்றனர். பொறுப்புக்கள் என்ற வகையில் குடும்பத்திலும், தொழில் துறைகளிலும், கல்விநிறுவனங்களிலும், காரியாலயங்களிலும் பொருளாதார அமைப்புக் களிலும் இவ்விரு பாலாருடைய பங்களிப்புக்கள் பகிர்ந்து கொள்ளப்படு கின்றன.

எனவே சமகாலத்தில் பொறுப்புக்கள் ஆண்/பெண் சமத்துவத்துடன் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன என்பது எம் முடிவு.

ச. வில்பேட்
இலுப்பைக்குளம்
வவுனியா.

**குவியல் – இரண்டு**


பொறுப்புக்களை சமூகரீதியாக நோக்கும்போது இரு பிரிவுகளாக காணலாம். முதலாவது நாம் சுயமாக சொந்த விருப்பின் பேரில் ஏற்றுக் கொள்ளுகின்ற கடமைப்பாடுகள். அவை உள, உணர்வு ரீதியானவையாகவோ அல்லது செயல் ரீதியானதாகவோ அமையலாம். உள, உணர்வு ரீதியானவை எனும்போது ஒருவருக்கு இன்னொருவர் மீதோ அல்லது ஒரு காரியம் மீதோ சுயமாக சொந்த விருப்பின் பேரில் எழுகின்ற அக்கறையையோ அல்லது

கடமைப்பாட்டையோ குறிப்பிடலாம். செயல் ரீதியானவை எனும்போது ஒருவர் தமது பெருமைக்காகவோ, புகழுக்காகவோ, வருமானத்திற்காகவோ ஏற்றுக் கொள்ளுகின்ற தொழிற்பாடுகளை குறிப்பிடலாம். இரண்டாவது விரும்பியோ விரும்பாமலோ சமூக பண்பாட்டு பொருளாதார அரசியல் சூழ்நிலைகளால் உந்தப்பட்ட எமக்கு கட்டாயத்தின் பேரில் கொடுக்கப்படுகின்ற கடமைப்பாடாகும்.

மேற்குறிப்பிட்ட வரையறைக்கு நம் தமிழ்ச் சமுதாயம் விதிவிலக்கானதல்ல. எமது குடும்பங்களை எடுத்துக்கொண்டால் அங்கு இருபாலாரின் பொறுப்புக்களும் ஏற்றத்தாழ்வற்றவையாக காணப்படுகின்றன. குடும்பத் தலைவன்தான் குடும்பத்தின் பொருளாதார நிலைக்கு பொறுப்பு என்ற பழைமைவாதக் கருத்து நீங்கி குடும்பத்தலைவியும் ஏன் பிள்ளைகளும்கூட குடும்ப பொருளாதாரத்தில் முக்கிய பங்காற்றுவதை எம் தற்கால தமிழ்ச் சமூகத்தில் காணக்கூடியதாக உள்ளது. எந்த ஒரு துறையை எடுத்துக் கொண்டாலும் அங்கு ஆண்களும் பெண்களும் ஈடுபடுவதை அவதானிக் கலாம். எம் சமூகத்தில் தற்போதுள்ள நிலையில் இது பெண்களுக்கு அல்லது ஆண்களுக்கு மட்டும் உரிய பொறுப்பு என்று சொல்லமுடியாத அளவுக்கு இருபாலாரும் தம் பொறுப்புக்களை பகிர்ந்து கொள்கிறார்கள்.

வீடுகளிலே இல்லறக் கடமைகளில் ஈடுபட்டிருந்த எம் குலப் பெண்கள் இன்று வேலைதேடி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அலைகிறார்களே அது ஏன்? அவர்கள் இல்லறப் பொறுப்புக்களை சரியானமுறையில் பகிர்ந்து கொள்ளவில்லை என்பதற்காகவா? நிச்சயமாக இல்லை. அதற்கான காரணம் எமது தமிழ் சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தை சீரமைப்பதற்கு குடும்பத் தலைவரிலோ அல்லது மற்றவர்களிலோ தங்கிவாழ முடியாத சூழ்நிலை எமது சமூக பொருளாதாரத்தில் ஏற்படுத்தப்பட்டதேயாகும். இன்னொரு வகையில் கூறினால் இதுவும் ஒருவகையில் பொறுப்புக்களை பகிர்ந்து கொள்ளுகின்ற வழியாகும். தங்கி வாழமுடியாத நிலைமை இயற்கையாகவே ஒவ்வொரு மனிதனையும் பொறுப்புள்ளவனாக்கும். பல இறப்புக்கள், இழப்புக்கள் உளவியல் தாக்கங்கள் அடிப்படை உரிமை மீறல்கள் மத்தியிலே வாழுகின்ற எம் தமிழ் சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தமக்குத்தாமே பொறுப்பு, தம் கடமைகளை தாமே செய்யவேண்டுமென்ற மனத்தெளிவு பெற்றிருப்பதும் ஒவ்வொருவரும் எவ்வாறு தம் பொறுப்புக்களை போதியளவு பகிர்ந்து கொள்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றது.

பெனோ
மாரிசன்கூடல், இளவாலை.



**தற்கால தமிழ் சமூகத்தில் ஆண், பெண் இருபாலாரும் பொறுப்புக்களை போதியளவு பகிர்ந்து கொள்வதில்லை.**

**எதிர்க்குவியல் – ஒன்று**

இன்றைய தமிழ்ச் சமூகம் ஆண், பெண் இருபாலாருக்கும் இடையேயுள்ள பொறுப்புக்களை உற்று நோக்கில் பொறுப்புக்கள் உரிய முறையில் பகிரப்படவில்லை என்பதே எமது கண்ணோக்காகும். இந்த வகையில் சமுதாயத்தின் கல்விநிலையை சீர்தூக்கிப் பார்க்கும்வேளையில் பெண்களைப் பொறுத்தமட்டில் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்ற ஆதி காவியம் மாறி ஆயுதம் ஏந்திப் போராடும் அளவிற்கு விண்வெளியில் ஆராய்ச்சி நடாத்தும் அளவிற்கும் ஏன் ஒரு நாட்டின் தலைமைப் பீடத்தையே ஏற்கும் அளவிற்கும் பெண்கள் உயர்ந்த போதும் கூட சமுதாயத்தில் முன்நின்று உழைப்பவர்கட்கும், தன் கருத்தை அச்சமின்றி வெளியிடுவோர்க்கும் அச்சமுதாயத்தில் இருந்தே கல்லெறிகள் விழத்தான் செய்கின்றன. இதனால் பொதுநலத்தில் ஈடுபடுவோர், சவால்களுக்கு முகம்கொடுக்க முடியாத பொதுநல நோக்கில் இருந்து விடுபடவேண்டிய ஒரு துர்ப்பாக்கிய சூழ்நிலை இருக்கின்றது.

ஆண்களைப் பொறுத்தமட்டில் பொறுப்புக்கள் சரியாகப் பகிரப்பட்டபோதும் குறிப்பிட்ட வீதத்தினரே அதனை உணர்ந்து செயற்படுதலும் ஏனையோர் அதனை உதாசீனம் செய்வதிலும் தட்டிக் கழிப்பதிலும் குடி போதையிலும், களியாட்டங்களிலும் ஈடுபடுவதில் வல்லவராகவே உள்ளனர். எனவே இன்றைய காலத்தில் பொறுப்புக்களை பொறுப்புடன் ஏற்று விருப்புடன் நிறைவேற்றுவதில் பெண்கள் முன்னிடம் பெற்றாலும் இன்னும் பொறுப்புக்கள் ஆண்களிடமே குவிந்துள்ளன.

திருமதி. யூலியஸ் யூஜின் – ஆசிரியர்
சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.

**எதிர்க்குவியல் – இரண்டு**

தற்கால தமிழ் சமூகத்திலுள்ள குடும்பங்கள், நிறுவனங்கள் தொழிற்சாலைகள் ஏன் எந்த செயற்பாட்டிலும் ஆண், பெண் இருபாலாரும் பொறுப்புக்களை போதியளவு பகிர்ந்து கொள்ளாது ஆண்கள் செய்யட்டும் என்று பெண்களும், இன்று சமவுரிமைக்காக போராடும் பெண்கள் செய்யட்டும் என்று ஆண்களும் ஒருவருக்கொருவர் பொறுப்புக்களை போதியளவு பகிர்ந்து கொள்ளாது கருத்து முரண்பாடுகளால் பல உடல் உளத் தாக்கங்களுமே உருவாக வழிவகுக்கிறது.

இன்றைய தமிழ் சமூகத்தில் பரம்பரை, கலாச்சாரம் என்ற அடிப்படையில் ஆண்களுக்கு என்று சில பொறுப்புக்கள், பெண்களுக்கு என்று சில பொறுப்புக்களை வரையறுத்து அதன் அடிப்படையில்தான் பொறுப்புக்களை ஏற்று வருகிறார்கள். பெண்கள் என்றால் பிள்ளையை பெற்றுவளர்த்தல், சமையல், வீட்டுக் கடமைகள், அலங்காரம், தையல், துணிதுவைத்தல் என நீண்ட பட்டியல். ஆனால் ஆண் வேலைக்குச் சென்று பணம் சம்பாதித்தல் மட்டும் என்று ஒரு குறுகிய நோக்கு. ஆண்கள் பெண்களின் பொறுப்புக்களில் பகிர்ந்து கொள்வது கௌரவக் குறைவு என்ற மனப்பான்மை. இதனால் பெண்கள் பல பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்பதை அவர்கள் உணர்வதில்லை.

குடும்பத்தில் பிள்ளைகளின் கல்வி வீழ்ச்சி, ஒழுக்கக் குறைவு, தவறிச் செல்லுதல் இவ்வாறான செயற்பாடுகளில் குடும்பத்தில் பொறுப்பை இருவரும் பகிர்ந்து கொள்ளாது ஆண்கள் பெண்களின் மேல் குற்றம் சுமத்துகிறார்கள். தாயைப்போல் பிள்ளை என்று கூறி ஒதுங்கிக் கொள்வதை இன்றும் சமூகத்தில் எங்கும் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. அதே நேரத்தில் கல்வியின் முன்னேற்றம் போன்ற நல்ல செயற்பாடுகளுக்கு ஆண்கள் தாங்கள் என்று மார்தட்டிக் கொள்கிறார்கள். இது எமது சமூகம் பொறுப்புக்களை பகிர்ந்து கொள்ளாது குறைநிறைகளை மட்டும் பகிர்ந்து கொள்வதில் முன்நிற்கிறது என்பதன் அடையாளமே.

இவ்வாறுதான் நிறுவனங்களாகவோ தொழிற்சாலைகளாகவோ எந்தச் செயற்பாடாக இருந்தாலும் ஆண், பெண் இருபாலாரும் குறைநிறைகளை பகிர்ந்து கொள்வதில் அல்லாது பொறுப்புக்களை பகிர்ந்து கொள்வதில் முன்நிற்போம்.

திருமதி. பற்றிமாராணி அந்தோனிப்பிள்ளை
சில்லாலை.

## கருத்துக்குவியல் 89

குற்றவுணர்வினால் ஒருவர் தனது குற்றங்குறைகளிலிருந்து திருந்தி வாழ்கின்றார். / மேலும் மேலும் தாழ்வு மனப்பான் மையடைந்து தன்னையே அழித்துக்கொள்கின்றார்.

நீங்கள் எந்தப்பக்கம்

எழுதுங்கள்

குவியுங்கள்

உங்கள் கருத்துக்களை நியாயப்படுத்துங்கள்
20.12.2001ற்கு முன்னதாக அனுப்பிவையுங்கள்.

## இலவச உளவியல் அஞ்சல்சேவை

- உங்கள் வாழ்க்கை விரக்தியின் விளிம்பிலா?
- உங்களுக்கு வாழ்க்கையில் தீர்மானமே எடுக்க முடியவில்லையா?
- உங்கள் வாழ்க்கையில் பாலியல் பிரச்சனைகளா?
- உங்கள் வாழ்வுப் பிரச்சனைகளுக்கு தற்கொலைதான் சரியான தீர்வா?
- உங்கள் உள்ளம் குற்ற உணர்வால் துடிக்கிறதா?
- உங்கள் உடலிலுள்ள குறைபாடுகளால் தவிக்கிறீர்களா?
- உங்களுக்குத் தனிமையுணர்வா?
- உங்களால் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லையா?
- உங்களால் உங்கள் பிரச்சனையை ஒருவரிடமும் சொல்ல முடியவில்லையா?

**உங்களுக்கு உள நலப்பணி செய்ய உங்கள் நண்பன் "நான்" தயாராகின்றான்.**

**நீங்கள் செய்யவேண்டியது.**

**உங்கள் பிரச்சினைகளை கேள்விகளாக எழுதி நான் சஞ்சிகைக்கு அனுப்புங்கள்.**
**உங்களுக்கு தகுந்த பதில்களை உளவியல் நிபுணர்களின் ஆலோசனைப்படி அஞ்சலூடாக இலவசமாக அனுப்பி வைப்போம்.**
**அத்தோடு உங்கள் பிரச்சனைகளுக்கு ஆலோசனை வழங்க உளவியல் வழிகாட்டிகளையும், உளநல நிலையங்களையும் அறிமுகப்படுத்துவோம்.**
**இவை உங்கள் நலன்கருதி இலவசமாகச் செய்யப்படும்.**

**உங்கள் வினாக்கள் பிரசுரமாகாது இரகசியம் பேணப்படும்.**

# மூத்தோர் மட்டில் இளையோரின் பொறுப்பு

V. P. துனேந்திரா
கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

பிறப்பு - வாழ்வு - இறப்பு இவை மனித வாழ்வில் நிச்சயிக்கப்பட்ட கட்டங்கள். இவை இயற்கையாகவே ஒன்றன்பின் ஒன்றாக ஏற்படுகின்றன. இந்த மானிட படிநிலை வளர்ச்சியில் முதுமைக்கட்டம்தான் பெரும் பாதிப்புக்குள்ளாகிறது.

உளவியல் கூற்றுப்படி ஐம்பதுமுதல் அறுபது வயதிற்குள் முதுமைப்பருவம் தொடங்க ஆரம்பிக்கின்றது. தோற்றத்தில் ஏற்படும் மாறுதல்களும் முடிநரைத்தலும் பலவீனமாதலும் பாலுணர்வில் ஏற்படும் தளர்ச்சியும் காது கேளாமையும் மங்கலான பார்வையும் ஞாபக மறதியும் தோல் சுருங்கலும் கூன்விழுதலும் வாழ்க்கையின் உச்சக் கட்டத்தில் இருந்து கீழே இறங்கும் உணர்வுகளும் பொதுவாக முதுமை என அழைக்கப்படுவதுண்டு.

இந்த முதுமை மேலைப் பண்பாட்டில் ஒரு பிரச்சினையாக உணரப்பட்ட காலத்தில், எங்கள் பண்பாட்டில் முதுமை இனிமையாக கருதப்பட்டதுமுண்டு. குடும்ப அமைப்பில் மதிப்பும் அதிகாரமும் கொண்ட பாத்திரமாய் முதியவர்களுக்கு மதிப்புத் தந்தது நமது பண்பாடு. முதுமையடைதல் அனுபவ முழுமையாகக் கண்டு அந்த அனுபவ கனிகளை வழிவழியாக சுவைத்தது நம் தமிழ் கலாச்சாரம். கூட்டுக் குடும்பவாழ்வில் முதுமை இயல்பாக இனிதாய் கழிந்தது அன்று. ஆனால், இன்று மேலை மயமாக்க அலைகளினாலும்-சமூக மாற்றங்களி னாலும் எமது மரபுவழி கூட்டுக்குடும்ப முறைகள் நீங்கி தனிக்குடித்தனம் தோற்றம் பெற்றது.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று பெற்றவரை தெய்வமாகக்கண்ட எமது பண்பாட்டில் பெற்றவர்களை இழிவுக்குரிய வராக, கொல்லைப்புறத்தே ஒதுக்கி வைக்கும் வேண்டாப் பொருளாக, சுமைகளாக கருதி புறக்கணித்து விடுகின்றோம்! இச்சந்தர்ப்பத்தில் "எனது வாழ்க்கையை நான் நிறைவாக முழுமையாக வாழ்ந்துள்ளேனா? எனது கடந்தகாலம் திருப்தியடைந்த வாழ்வாக அமைந்துள்ளதா? நான் எனது வாழ்க்கையை நன்றாக வாழ்ந்திருக்கிறேனா?" போன்ற உளப் போராட்டம் மூத்தவர்கள் மத்தியில் ஏற்படுகின்றது! இதனால் அமைதி, மகிழ்ச்சியிழந்து, விரக்தி, பயம் ஏற்பட்டு, மரணம் மட்டும் நிம்மதியின்றி வாழவேண்டிவரும். எனவே இவ்வுளப்போராட்டத்தினை நல்லபடியாக நிறைவேற்றி கொடுப்பது அல்லது நிறைவேற்ற வழியமைப்பது மற்றோரின் பொறுப்பு.

இந்த பொறுப்பினை என்னென்ன வகையில் செய்யலாம் என்பதனை நோக்குவோம்.

- செயற்படும் வல்லமையுடைய தொழில் புரியும் முதியவர்களை கட்டாய வயது வரம்புகாட்டி வேலையிலிருந்து ஓய்வு கொடுத்து அவர்களை செயலிழக்காமல் பாதுகாப்பதோடு அவர்களினால் இயன்ற வேலைகளை செய்யத் தூண்டவேண்டும்.

- உடல் - உள நோயினால் ஏனையோரில் தங்கி நிற்கும் முதியோர்களை வயோதிபர் இல்லங்களில் சேர்த்தோ அல்லது வேலைக்கு ஆளமர்த்தியோ பாதுகாக்கலாம். எனினும் நம் நேரடி பார்வையின்கீழ் இருப்பதும், தொடுகை உணர்வுகள் மூலம் அன்பை சொரிந்தும், இனிமையாக பேசுவதும் மூத்தோருக்கு விருப்பம் தரும்.

- மூப்படைந்தோர் பாவிக்கும் அறை, சுற்றம், சூழல் சுத்தமாகவும், அழகாகவும் இருத்தல் மிக நன்று. அத்துடன் அவர்களுக்கு மிகவும் மதிப்புக் கொடுத்து, அனுபவ அறிவுரைக்கு செவிமடுத்து, இனிமையாக உரையாடி, மூத்தோரை காணும் நேரமெல்லாம் புன்னகையால் அன்பை சொரிந்து, மரியாதையாக கதைத்துக் கொள்ளவேண்டும்.

- சிறுவர்களுக்கு என்னென்ன விதமாக மிகக்கவனமாக உணவு கொடுத்து பாதுகாக்கின்றோமோ, அதேபோல, மூத்தோரையும் அவர்களின் நோய், சமிபாட்டு நிலை, கழிவகற்றும் தன்மை போன்றவற்றினை கவனத்தில் கொண்டு உணவுவகைகளை கொடுத்தல் மிகவும் நல்லது.

- பொதுவாக மூத்தோரின் தசைகள், எலும்புகள் வலுக்குறைந்த நிலையில் காணப்படுவதனால், விழுவதும், தடுமாறுவதும் அவர்களில் சாதாரணம். இதனால் அவர்கள் பாவிக்கும் இடங்களில் பிடித்து நடப்பதற்கு சட்டங்கள், கயிறுகள் அமைத்தலும், மலசலகூடம், கிணற்றடி போன்ற இடங்களில் சறுக்கி விழுந்துவிடாதபடி சொருசொருப்பாக அமைத்தல்வேண்டும்.

- வாசிப்பு பழக்கம் உள்ள மூத்தோருக்கு புதினப்பத்திரிகைகள் கொடுக்கலாம். மற்றும் கதைப் புத்தகங்கள், வேறு புத்தகங்ள் அவர்கள் விரும்பி கேட்பின் அதனை எவ்வளவுக்கு சீக்கிரமாக எடுத்துக் கொடுக்கமுடியுமோ அவ்வளவு விரைவாக எடுத்துக்கொடுக்க வேண்டும்.

- சிறுவர் - சிறுமியருடன் சேர்ந்து விளையாடவும், கதைகள் சொல்லவும் நேரம் ஒதுக்கி கொடுத்தல் நன்று. இதனால் சிறுவர்களுக்கு எமது விழுமியம் - பண்பாடு கற்பிக்கப்படுகின்றது. அத்துடன் மூத்தோரும் மனநிறைவும், மகிழ்ச்சியும் கொள்வார்கள்.

முதியோருக்கு இடையேயும் கலந்து உறவாடி தங்கள் காலத்தை எண்ணி மகிழ ஒன்றுகூடல் அவசியம். இதற்கு ஏதுவாக முதியோர் கழகங்கள் கிராம மட்டத்தில் அமைக்கப்படவேண்டும். இவற்றின் மூலம் தத்தம் வயதொத்தவர்களுடன் பேசிப்பழகுவது, சிரித்து மகிழ்வது, உடல்

நிலைக்கு ஏற்ற உள்ளக - வெளிக்கள விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்துவது, இதில் பங்குபற்றும் மூத்தோருக்கு ஒரு பெரிய மருந்தாக இருக்கும்.

யுத்த சூழ்நிலையில் வாழும் நாம் பல உடமைகள், உயிர்கள், சொத்துக்கள், உறவுகள், குடும்ப உறுப்பினர், நண்பர்கள், வீட்டுப் பிராணிகள், உடல் உறுப்புகள், (அவயங்கள்) புத்தகங்கள் போன்ற பலவற்றை நிரந்தரமாகவும், தற்காலிகமாகவும் இழந்துபோக வேண்டி ஏற்படலாம். இவ்வாறு இழப்புக்கள் ஏற்பட்டால் மூத்தோரால் தாங்கிக் கொள்வது மிகவும் கடினம். எனவே அவர்களுடன் இருந்து உளவியல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் ஆற்றுப்படுத்த வேண்டும்.

முதியவர்கள் குழந்தைகள் போன்று எதனையும் அடம்பிடித்து கேட்பார்கள். எனினும் அவர்களுக்கு உளவியல் ரீதியாக அதிகம் தேவைப்படுவது அன்புறவே. ஆகவே நாம் உடன் இருப்பதும், இனிமையாக பேசுவதும், அவர்களின் தேவைகளின் பெரும்பகுதி பூர்த்தியாகும்.

இறுதியாக கவனிப்பற்ற மூத்தோரை தனியார் - அரச முதியோர் இல்லங்களில் சேர்த்துக்கொள்ளவேண்டும். இதுமட்டுமல்ல எம்மால் இயன்றளவு எமது நேரத்தை இவ்வில்லங்களில் செலவழித்து அங்குள்ள மூத்தோருடன் ஆறுதலாக கதைத்து அன்புறவு கொள்ள வேண்டும். மற்றும் வீதியால் செல்கின்ற முதியோரை "*கிழடு, பழசு, நையின்ரி*" போன்ற சொற்களினால் இழிவுபடுத்தி மகிழாமல், மாறாக புன்னகைத்து உதவி தேவைப்படும் மூத்தோருக்கு எம்மால் இயன்ற உதவி புரியவேண்டும்.

ஈன்ற பருவத்திலிருந்து நம் எதிர்காலம்வரை, எம்மைக்காத்து, வளர்த்து, எமக்காவன அத்தனையும் புரிந்தவர்கள் எம் பெற்றோர்கள். அவர்கள் முதுமை அடைகின்றபோது அவர்கள் வயோதிபர், அழகற்றவர், இயலாதவர் என பழித்துரைத்துத் தூற்றி உதாசீனம் செய்வது முறையில்லை. ஆகவே அவர்கள் மட்டில் உள்ள அத்தனை கடமைகளையும், பொறுப்புக்களையும் செய்வோம். இவ்வுலகில் முதற்கண்ட தெய்வம் அவர்கள்தான் அவர்களுக்குரிய பொறுப்புகளைச் செய்வதன் மூலம் முதுமை இன்பமாக, மகிழ்ச்சி நிறைந்ததாகவும், தீவிர மரண பயமின்றியும் அமையும். அவர்கள் மட்டில் எமக்கும் குற்றவுணர்வும் ஏற்பட வாய்ப்பில்லை. எமக்கும் சந்தோஷம் பொங்கும்.

உசாத்துணை :

1. சமூக மாற்றத்தின் பண்பாடு, கலாநிதி என். சண்முகலிங்கன், சவுத் விஷன் வெளியீடு.
2. முதுமை, Dr.சா. சிவயோகன், Prof.தயா சோமசுந்தரம். சாந்திகம் வெளியீடு.



# பார்வை

ஒரு தெருவிலே சில சிறுவர்கள் விளையாடிக்கிட்டிருந்தாங்க.

ஏதோ ஒரு உயரமான கல்லை நடுத்தெருவிலே வச்சி அதை சுத்தி சுத்தி ஓடிவந்திகிட்டிருந்தாங்க. அது என்ன விளையாட்டோ அவங்களுக்கே வெளிச்சம்.

விளையாடி முடிச்சதும் அந்த கல்லை நடுத்தெருவுலே அப்படியே விட்டுட்டு அவங்கவங்க வீட்டுக்கு ஓடிப் போயிட்டாங்க.

அதுக்கப்புறம் அந்த வழியா ரெண்டு பெண்கள் பேசிக்கிட்டே வந்தாங்க. பேச்சு சுவாரஸ்யத்துலே நடுத்தெருவுலே இருந்த அந்தக் கல்லை கவனிக்கலே. கால்லே இடிச்சுட்டுது. ரத்தம் வந்துட்டுது! வலி தாங்கலே. கால்லே இடிச்சிக்கிட்ட பொண்ணு திட்ட ஆரம்பிச்சுட்டுது!

*"வர வர ஊரு உலகம் ரொம்ப கெட்டுப்போச்சு! யாருக்கும் பொறுப்பே கிடையாது. பாரு.... இப்படி நடுத்தெருவுலே பொறுப்பில்லாமே இந்த கல்லை போட்டு வச்சிருக்காங்களே.... இது நியாயமா?"* இப்படி கடுமையா இந்த சமூகத்தை விமர்சனம் பண்ணிக்கிட்டே அவங்க போயிட்டாங்க.

கொஞ்சம் நேரம் கழிச்சி ஒரு வாலிபன் அந்த வழியா வந்தான். அந்தக் கல்லைப் பார்த்தான். நின்னான் ஒரு நிமிஷம் யோசிச்சான். என்ன பண்ணலாம்ன்னு பார்த்தான். தன்னுடைய வீரத்தையும் பலத்தையும் காட்டணும்ன்னு நினைச்சான். கொஞ்சம் பின்னாடி போனான். வேகமா ஓடிவந்து ஒரு சின்ன 'ஹைஜம்ப்' – அப்படியே தாண்டி அந்தாண்ட குதிச்சான்.... விசிலடிச்சிக்கிட்டே போயிட்டான்.

அடுத்தபடியாக ஒரு காதல் ஜோடி அந்த வழியா வந்துது. நடுத்தெருவுலே கல்... கண்ணுலேபட்டுது. அவங்க ரெண்டு பேரும் ரொம்ப நெருக்கமா சேர்ந்து வந்துக்கிட்டிருந்தாங்க. நடுவுலே கல் இருக்கிறதுனாலே கொஞ்சநேரம் ரெண்டுபேரும் விலகி மறுபடியும் இந்தப் பக்கம் வந்து சேர்ந்து நடந்து போயிட்டாங்க.

கடைசியா அந்த வழியா பார்வையில்லாத ஒருத்தர் வந்துகிட்டிருக்கார். அவர் கையிலே வழக்கமா வச்சிருக்கிற அந்த ஊன்றுகோல்! கையிலே இருக்கிற அந்த ஊன்று கோலாலே தனக்கு முன்னாடி அப்படியும்

இப்படியுமா தட்டிப் பார்த்துக்கிட்டே அவர் மெதுவா நடந்து வந்துக்கிட்டிருந்தார். வழியிலே இருக்கிற அந்தக்கல் தட்டுப்பட்டது.

உடனே நடுத்தெருவுலே ஒரு கல் இருக்குங்றதை அவர் புரிஞ்சிக்கிட்டார். உடனே குனிஞ்சார். அந்தக்கல்லை தடவிப்பார்த்து எடுத்தார். தெரு ஓரமா கொண்டுபோய் போட்டார்.

அதுக்கப்புறம் அவர் பாட்டுக்கு அவர் வழியிலே நடந்துபோனார். இப்போ இதுலே பலபேர் வந்தாங்க... போனாங்க... இவங்கள்லே பார்வை உள்ளவர் யார்? பார்வை இல்லாதவர் யார்?

இப்படி ஒரு கேள்வி கேட்டா என்ன பதில் சொல்லுவீங்க. கொஞ்சம் யோசிச்சுப் பார்த்தா இன்னைக்குப் பலவேர் இப்படித்தான் இருந்து கிட்டிருக்கோம்.......

**நன்றி : 'இன்று ஒரு தகவல்'. பாகம் - 14**

## சில்லறைப்பிரச்சினை

**அப்புவின்ரை வெத்திலை ஆனைவிலை - உடைந்த**
**அமெரிக்கக்கோபுரங்கள் காரணமாம்.**
**உக்கிப்போன ஒடியலுக்கே உந்த விலை?**
**உலக மார்கெற் சரிஞ்சுபோயிற்று தெரியுதல்லோ**

**என்ன அன்பர்களே!**
***திடுதிடுப்பென ஏறிவிட்ட விலை வேதாளத்தைச் சமாளிக்க "நானிற்கு" முகப்பெறுமதி ஐந்து ரூபாய்களினால் அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம்.*** உலக நியமங்களை உதாசீனம் செய்ய முடியாத கட்டாயம்.

**புதிய ஆண்டில் புதிய விலை**

**ஆண்டுச்சந்தா**
**உள்நாடு – 150/=**
**வெளிநாடு – 7U$**

**என்னைப் புரிந்து கொள்ளுகிறீர்கள் - எனவே**
**உங்களில் பூரிப்படைகின்றேன்.** - நன்றி -

# போர்க்கால சூழலில் குடும்பத்தில் விதவைகள்

கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாகப் "போர்" என்பது "உணவு" போல நாம் எப்போதும் கேட்கிற, எப்போதும் பேசுகிற, எப்போதும் வாசிக்கிற, எப்போதும் அநுபவிக்கின்ற சொல்லாகி விட்டது. கொடும் போரின் தாக்கங்களை நாம் உணரத்தொடங்கியுள்ளோம். இவைகள் எமது உள்ளத்தில் வடுக்களை பதித்துள்ளன. கோரக் கொலைகள், மரணங்களால், கணவனை இழந்து விதவைகளாக்கப்பட்ட பெண்கள், முடமாக்கும் காயங்கள், வீடுகளின் சமூக அமைப்புக்களின் அழிவுகள், இடப்பெயர்வுகள், வேலையில்லாத திண்டாட்டம், ஏழ்மை, சமூகச் சீர்குலைவு, சிறுவர்கள் துர்ப்பிரயோகம். இவைகள் அனைத்தும் நாட்டில் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. இந்த அனர்த்தங்களின் தாக்கம் குடும்பத்தில்தான் முதலில் உணரப்படுகின்றது. மேற்கூறப்பட்ட நிகழ்வுகள் யாவும் குடும்பத்தில்தான் நிகழமுடியும். குடும்பத்தில் அங்கத்தவரான கணவனை இழந்தால், அந்த விதவைப் பெண்ணின் குடும்பம் தன் சமநிலையை இழக்க நேரிடும். இதனால் குடும்ப அங்கத்தினரின் எல்லைகள் பாதிப்புறுகின்றன. இறுக்கமான, துலக்கமான எல்லைகளை உடையோர் மழுங்கிய எல்லைகள் உடைத்தோராக வருவர். இதனால் குடும்ப சட்டங்கள், சம்பிரதாயங்கள், காலாதிகாலமாக கடைப்பிடித்துவந்த சிலவழிமுறைகள் ஓரளவு இல்லாமல் போகின்றதை, நாம் காண்கின்றோம். உ+ம்: பெற்றார் அதிகளவு தம் பிள்ளைகளுக்குச் செல்லம் காண்பித்தல், பிள்ளைகள் தம் பெற்றோருக்கு கீழ்ப்படிதலற்ற தன்மையைக் காட்டுதல். தன் பொறுப்புக்களிலிருந்து விலகிக் கொள்ளுதல், எல்லாரையும் தன் வீட்டிற்குள் வர அனுமதித்தல் என்பன எல்லைகளை இழத்தலின் சில வெளிப்பாடுகள் ஆகும். இங்கு எல்லைகள் மழுங்கிய நிலையில் காணப்படுவதால் குடும்ப அங்கத்தினரின் ஆளுமை வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

போரின் வடுக்கள் என்றும் மாறாப் புண்களாக குடும்ப உறவுகளை பாதிக்கின்றன. மிகக் கொடூரமான கொலை, சாவு, அல்லது இழப்புக்களின் பின் குடும்ப அங்கத்தினர் சிலர் இந்நிகழ்வுகளை ஓரளவு சமாளித்து கூடிய விரைவில் "சமநிலை" அடைவர். ஆனால் சிலர் இந்நிகழ்வுகளால் ஏற்படும் அதிர்ச்சிகளை சமாளிக்க முடியாதவாறு காணப்படுவர். இதனால் இவர்கள் பயமும், பதட்ட நிலையும் உள்ளவர்களாக இருப்பர். உ+ம் இப்படியான ஒரு நிலை பெரும்பாலும் மனைவிக்கு ஏற்பட்டால் எதிலும் ஆர்வம் குன்றிக் காணப்படுவர். வேலையில் அக்கறையின்மை, கடமைகளில் தவறுதல், பாலியலில் ஈடுபாடு அற்ற தன்மை, வாழ்வில் ஏனோ தானோ என்ற போக்கில் இருப்பர். பிள்ளைகளை பராமரிக்கும் நிலை குன்றுதல், போன்ற நிலைப்பாட்டிற்குள் தள்ளப்பட்டு விடுவர். இப்படிப்பட்ட குடும்ப அங்கத்தவர்கள் மனச்சோர்வு உடையவர்களாக இருப்பார்கள். இவர்கள் துயரமுற்றவர்களாக எப்பொழுதும் அழுதுகொண்டு தங்களுடைய இழப்பைப் பற்றி அல்லது நம்பிக்கையற்ற நிலைபற்றி சிந்தித்துக்

கொண்டிருப்பர். இதனால் இவர்களால் எதிலும் கவனம் செலுத்தமுடியாமல் அல்லது ஞாபக சக்தி இழந்து தங்களுடைய ஆற்றல்களில் தளர்ச்சியுடையவர்களாக இருப்பார்கள்.

அதுமட்டுமல்ல போரின் தாக்கங்களினாலும், ஏனைய காரணிகளாலும் விதவைகளாக்கப்பட்ட பெண்களுக்கு உளம் மட்டுமல்ல உடலிலும் நோயுறுவர். போரின் வடுக்களால் குடும்ப அங்கத்தவர்கள் நோயுறுவது மிகச் சாதாரணமானது. இப்படிப்பட்டோரில் இதயப்படபடப்பு, சுவாசிக்க கஷ்டப்படுதல், நெஞ்சு நோவு, தலையிடி, இடுப்புவலி, உடல்வலி, நாவரட்சி ஏற்படுதல் என்பன காணப்படும். சிலபோ் தலைச்சுற்று, மயக்கமுறுதல், வயிற்றோட்டம், காக்கை வலிப்பு போன்ற நோய்களினாலும் அவதியுறுவார்கள். குடும்ப உறவுகள் சிதறுவதற்கு போரின் நிகழ்வுள் காரணமாகின்றன. எதற்கும் எடுத்தாற்போல் வெடுவெடுப்பாக முன்கோபமுறுதல், கூடிய கோபம் கொள்ளுதல், மிகக் கொடூரமான வன்செயல்களில் ஈடுபடுதல், மற்றவர்களை மதிக்காமை, பிடிவாதம், மற்றவர்களை வெறுக்கும் தன்மை, சமூக விரோத செயல்களில் ஈடுபடுதல், பொய் சொல்லுதல், பிரமாணிக்கம் தவறுதல் விபச்சாரச் செயல்களில் நாட்டம் ஏற்படுதல், களவெடுத்தல் என்பவற்றாலும் குடும்ப உறவுகள் சிதறுகின்றன.

சில பெற்றோர் தங்களுடைய குடும்ப வாழ்க்கையை நல்ல அன்புறவில் நடத்துவதற்கு பதிலாக ஏனோ தானோ என்ற போக்கில் வாழ்கின்றனர். சில பெற்றோர் முடமாக்கும் காயங்களுக்கு ஆளாகும் போதும் அல்லது தந்தையை இழக்கின்ற போதும் பிள்ளைகள் தாமே தம்மை கவனியாது வாழ்வர். இப்படிப்பட்டவர்கள் தாம் வாழும் குடும்பத்திற்கு உதவி செய்யாமல் அதே குடும்பத்திற்கு பல விதமான சுமைகளை ஏற்படுத்துவர். பிள்ளைகள் தமது தந்தையை இழந்திருந்தால் அவர்களுக்கு அதிக கரிசனை தேவைப்படுகின்றது. இப்படியானவர்கள் சீராக கவனிக்கப்படாத பட்சத்தில் அவர்கள் விரும்பத்தகாத சில செயற்பாடுகளில் ஈடுபடுவர் (உ+ம் : தனிமையாக இருத்தல், எல்லாவற்றையும் அழுக்காக்குதல், பிரச்சினைகளை உண்டாக்குதல், எதிர்பாலாரோடு கூடுதலான நாட்டம் கொள்ளுவர்). ஆரம்ப காலங்களில் இவைகளுக்கு தகுந்த நிவாரணம் அல்லது சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் பிற்காலத்தில் பள்ளிக்கூட வாழ்வில் கல்வியில் சிரத்தை காட்டாது வாழ்தலும், தீச்செயலில் அதிக நாட்டம் காட்டுதலும் இவர்களின் செயற்பாடுகளாக விளங்கும்.

போர் நடந்து கொண்டிருக்கும் வடகிழக்கில் இன்னும் பல குடும்பங்கள் தாக்கப்பட்ட வண்ணமாக இருக்கின்றன. போரின் முடிவுறாத்தன்மை இன்னும் பல சிக்கல்களைக் குடும்பத்தில் ஏற்படுத்துகின்றது. நிச்சயமற்ற எதிர்காலம் என்ன செய்யலாம் என்ற பெரும் கேள்வியை எழுப்புகின்றது. நீண்டு கொண்டு போகும் போரினால் விதவைப் பெண்களின் குடும்பங்கள் வறுமைக்குள் தள்ளப்படுகின்றது. வேலை வாய்ப்புகள் இல்லாமையினால் குடும்பத்தின் பொருளாதாரம் சரிந்து செல்லுகின்றபோது, குடும்ப அங்கத்தினர் குறிப்பாக விதவைப் பெண்கள்

செய்வது எது என்று அறியாது திகைக்கின்றனா. இதனால் விரக்தியடைந்து மனச்சோர்வடைகின்றனர். படிப்புக்கேற்ற வேலை கிடைக்காமை, எண்ணியதைச் செய்ய இயலாத நிலை. இவைகள் எல்லாம் படிப்படியாக விரத்தியைக் கூட்டிக் கோபத்தை அதிகரித்து வாழ்வே ஒரு சூனியமாக மாறுகின்றபோது வாழ்வை மாய்த்துக் கொள்ளும் தற்கொலைகளையும் சில விதவைகள் அல்லது பிள்ளைகள் மேற்கொள்வதையும் நாம் பார்க்கின்றோம்.

இத்தகைய அழுத்தங்களால் விதவைகளின் குடும்பத்தில் சண்டைகள். சச்சரவுகள், பிளவுகள், வன்முறைகள் அதிகரிக்கின்றன. தந்தையை இழந்த பிள்ளைகளும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். வறுமையால் திருடும் நிலை தெருக்களில் பிச்சை எடுக்கும் நிலை, 12 வயதிலேயே தொழில் வாய்ப்பை தேடிச்செல்லும் நிலை, கல்வியை புறக்கணிக்கும் நிலை போன்றவை காணப்படுகின்றன. சிறுவயதிலேயே பிள்ளைகள் 'ஓடித் திருமணம்' செய்து கொள்கின்றனர். இதனால் குடும்பத்தில் பல ஒழுக்க சீர்கேடுகளும் மலிந்து காணப்படுகின்றன. போர் நின்றாலும் இத்தகைய ஒழுக்கச் சீர்கேடுகள் கொஞ்சக்காலம் தள்ளித்தான் நிற்கும்.

எனவே இப்போரினால் விதவைகள் மட்டுமல்ல ஏனையோரும் பாதிக்கப்படுகின்றனர். ஆனால் விதவைகளின் நிலைமை போர்க்கால சூழ்நிலையில் பெரிதும் பரிதாபத்திற்குரியது.

S. செறீன் B. A
உளவளத்துணையாளா

**வாசகர் கடிதம்**

கனம் ஆசிரியர் அவர்கட்கு...
தங்கள் நிறுவனத்தால் வெளியிடப்படும் 'நான்' உளவியல் சஞ்சிகையினைத் தவறாது வாசித்து பயன்பெறுகிறேன். சிறந்த வடிவமைப்பு, நவீன முறையிலான கணனி அச்சுப்பதிப்பு, மற்றும் சிறந்த அதேவேளை மிகப்பயனுறுதி வாய்ந்த ஒவ்வொரு ஆக்கமும் மிகவும் தரமுடையதாகவும் அமைந்துள்ள இவ்வளவிற்கும் பிரதி ஒன்றின் விலை 15/= என்பது பிரமிக்க வைக்கிறது. தற்கால நிலைமையில் தாங்கள் இவ்வளவு குறைந்த தொகைக்கு பிரதியினை வெளியிடுவது சகலரையும் சென்றடைய வழிவகுக்கின்றது. தங்களது இவ்வரிய சேவை தொடர்வதற்கு இறைவனே அருளாசி நல்குவாராக.

A. விமல்ராஜ்
நவாலி வடக்கு.

# வாலிப வசந்தம்



ஆரோக்கியமாக பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் தாயினுடைய பொறுப்புணர்வின் பிரதிபலனாகும். "றெஸ்போன்சிபிலிற்றி" (Responsibility) என்ற ஆங்கிலச் சொல்லை The ability to respond என பொருள் கொள்ளலாம். கொடுக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒருவன் எப்படி தகுந்த முறையில் (respond) இயங்குகின்றார் என்பதிலிருந்து ஒருவருடைய பொறுப்புணர்வை அளவிட்டுக் கொள்ளலாம்

ஒவ்வொருவரும் முதலிலே தன்மட்டில் பொறுப்புள்ளவராக இருக்க வேண்டும். நியாயமான தனது அகத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். உடல், மனம், ஆன்மா ஆகியவற்றின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். ஒவ்வொருவரும் இத்தேவைகளை தாமே நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். இத்தேவைகள் மட்டில் ஏனையவர்களுக்கும் பொறுப்பு இருக்கின்றது என்பதனையும் மறந்து விடலாகாது. இவற்றோடு ஒருவருக்குள்ள புறத்தேவைகளும் நிறைவேற்றப்பட வேண்டும். இவை அரசியல், பொருளாதார, சமூக தேவைகளாக விரிவடைகின்றன. ஒரு நாட்டினுடைய அரசு, மக்களின் இத்தேவைகளை பொறுப்பேற்று நிறைவேற்ற வேண்டும்.

இளையோரே, உங்களில் பலர் மாணவர்களாகவும் சிலர் தொழில் செய்து கொண்டும் இருப்பீர்கள். உங்களது படிப்பிலும் தொழிலும் எவ்வாறு பொறுப்புள்ளவர்களாக இருக்கின்றீர்கள்? உங்கள் வேலைகளை மற்றவர்கள் நினைவூட்டுவதற்கு முன்பாகவே செய்கின்றீர்களா? செய்யும் வேலைகளை மகிழ்ச்சியோடு முழுமையாக செய்கின்றீர்களா? அவ்வாறெனில் நீங்கள் ஓரளவு பொறுப்புள்ளவர்கள். நீங்கள் வாழும் குடும்பத்தில் சமூகத்தில் எற்படும் திடீர் தேவைகளில் உங்கள் பங்களிப்பு என்ன? கேட்கப்படாமலேயே ஓடிச்சென்று உதவுகிறீர்களா? சில பொறுப்புக்களை தானாகவே முன்வந்து செய்கின்றீர்களா? அவ்வாறாயின் நீங்கள் அதி பொறுப்பு வாய்ந்தவர்கள். நீங்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். தொடர்ந்து முன்னேறுங்கள்.

மேலே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு "ஆம்" என்று பதிலளிக்க முடியவில்லையாயின் உங்கள் பொறுப்புணர்வில் நீங்கள் முன்னேற இடம் இருக்கின்றது. கடுமையாக முயற்சி எடுங்கள். தொடர்ந்து முன்னேறுங்கள். பொறுப்புள்ள பிரஜைகளாக உங்களை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

- இளவல்

# நாடோடி

**அவன்** ஓடிக்கொண்டிருந்தான். உடலில் உள்ள சக்தி அனைத்தையும் ஒன்றுதிரட்டி கால்தசைகளுக்கு இயக்கம் கொடுத்துக் கொண்டிருந்தான். இல்லையேல் மரணமே அவன் கதி. உறைபனி, பின்தொடரும் பொலிஸார். திக்குத்திசை தெரியாமல் ஓடினான். ஆனாலும் அது ஜேர்மனிய எல்லை நோக்கிய ஓட்டமாக இருக்க வேண்டும் என்பது அவனது அழுகைப்பிராத்தனை.

“***என்ன** ராசாத்தி உன்ர மோன் வெளியில இருந்து ஒண்டும் அனுப்பயிலையோ? கிறிஸ்மசும் வருகுது*”. சந்தையடியில் கதைகொடுத்தாள் பூரணம். நீ வேற என்ர வயித்தெரிச்சலைக் கிண்டாத. உவன்பாவி, போனது போனதுதான் இப்ப ஆறுமாதமாப்போயிற்று. உள்ளதெல்லாம் கொட்டிக்குடுத்தும் ஒரு பலனுமில்லை. கடைசியா எடுக்கேக்கை எங்கையோ ரசியாவிலையோ என்னமோ நிக்கிறானாம் கெதியில போய்ச்சேர்ந்து விடுவானாம் எண்டு சொன்னவன். கூப்பிட்ட மச்சான்காரன் ஒரு பொறுப்பில்லாமல் இப்படி இது இழுபடுகுது.

**வாசிகசாலையில்** அன்றைய தினசரியைப் படித்துமுடித்துவிட்ட தந்தை ஞாப்பிரகாசம் தனக்குத் தெரிந்த அரசியல் ஞானத்தை உரையாடலில் காட்டினார். எங்கட நாடும் எங்கட பெடி பெட்டையளும் படுகிறபாட்டைப் பார்த்தாப்பத்திக் கொண்டுதான்வருகுது. அம்பத்தாறாமாண்டே நாங்கள் கவனமாயிருந்திருந்தா இதுகள் வந்திருக்குமோ? எங்கட சில அரசியல்வாதிகள் பொறுப்பில்லாம நடந்ததாலதான் எல்லாம் இறுகிப்போயிருக்குது .................... “*ஏன் இப்ப இருக்கிறதுகள் மாத்திரம் என்ன பொறுப்போடயே நடக்குதுகள்?*”. தன் பாங்கிற்கு கூறிவைத்தார் தணிகாசலம்.

"அட இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை இவன்கள் தண்ணிய கிண்ணியை போட்டி'டு கொஞ்சம் அசந்திருப்பான்கள் எண்டு நினைச்சால் வேட்டை நாய்கள் மாதிரி திரியுறான்களே. அதுதான் வெள்ளைக்காரன்." வாயில இருந்து வருகிற சுவாசம் வெளியில் உள்ள உறைபனிக் குளிரில் புகையைக் கக்குவதுபோல் தோன்றியது. தான் கேள்விப்பட்ட எல்லாத் தூஷணவார்த்தைகளாலும் பேசவேண்டும் போல் தோன்றியது. ஆனாலும் யாரைப் பேசுவதென்றுதான் தெரியவில்லை. இயக்கம் கெட்டுவிட்டான். ஆயினும் பலரின் பொறுப்பற்றதனமும் சிலரின் மட்டில் தனக்குள்ள பொறுப்பும் அவனை ஓட வைக்கிறது. அவன் ஓடிக்கொண்டிருக்கிறான்.

'வடலியோன்'

⏮ ⏭


**கடல் கடந்து சந்தா**

**வெளிநாட்டு நான் வாசகர்களே!**
**தங்கள் கொடுப்பனவுகளை**

Commercial Bank, Jaffna இற்கு
Editor, Naan Psychology Magazine,
A/C.No. 26146 இற்கு செலுத்துங்கள்.

**கொடுப்பனவுகள் சார்பாக எமக்கும் அறிவியுங்கள்.**

அடுத்த நாளில் எதிர்பாருங்கள்

தை ~ மாசி 2002

# குற்றப்பழியுணர்வு
# (Guilt Feeling)

"நான்" உன்னுடன் சங்கமிக்க,
நல்ல உள்ளத்தை உருவாக்க.....

"நான்" கொணரும் உளவியல்
கருத்துக்களை உன்னுடன் பகிர.....

**ஆண்டுக்கு ஆறு தடவை**
**உங்கள் கரங்களில்**

தனிப்பிரதி **20/=**

ஆண்டு சந்தா
உள்ளூர் - **150/=**
வெளியூர் - **7US$**

முகவரி:

"நான்"
டி மசனட் குருமடம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

**J.S.Printers, Sillalai.**